www.tamilarangam.net

தமிழர்களை முன்னேற்றம், ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை !

# சர்வதேசதமிழர் SARVADESA TAMILER

Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & solidarity!



புதுச்சேரி தமிழமல்லன்



எக்ஸ்நோரா – எம்.பி.நிர்மல்

ரந்துவாழும் சர்வதேச தமிழர்கட்கும்
ன்அன்பு ரசிகர்கட்கும் புத்தாண்டு
பொங்கல் வாழ்த்துக்கள்! – பிரியமுடன் பிரசாந்த்

சென்னை முதல்வர் – மு.க.ஸ்டாலின்



யப்பானில் இருந்து வாழ்த்து!

'ஜான்ஸ்டைன் அகராதி' என்ற இல்வாணர்(ப) வெளியிட்டேன்.
பிள்ளைகளின் கைகளில் அதுதான். எங்களின் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

KANTHA SRI, SAKI, SACHIKO, SANGITA

あけましておめでとうございます
HAPPY NEW YEAR 1997



1969-1997 சித்திரை-31

RADIO VERITAS ASIA
Tamil Service
P.O. Box 2642
Quezon City, Philiphines



மாஸ்கோ சுகுமார்

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள் / நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.திலீபன்.22.166733:கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன்.ஜ.றோயலா துறொண்கைம்:த.தியாகலிங்கம்
ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்:முபாரக் அலி கிறிஸ்ரியன்சான்ட்:ம.பஸ்ரியன்ஏககண்ட்:பொன்.சிவா:துறம்சோ:கே.சிவராஜா: வார்டோ:

**சர்வதேசதமிழர் 1997**
**தொ.4,இல.1 தை-மாசி**

**ஆசிரியர் கருத்து:**
**தமிழரும் அவலமும்!**

தமிழர்க்கு அவலம் பல வழிகளில் வருகிறது,எனினும் அநியாயச்சாவுகள் பெரும் சோகத்தை தந்து தமிழர்சமுதாயத்துக்கு கடுமையான உளப்பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அவலம் எதிரிகளால் மட்டுமன்றி நம்மவராலும் வலிந்து தேடப்படுவதாயும்,உள்ளதுதான் மிகக்கவலை!

பழைய கிரேக்ககப்பலில்,மால்ராவிலிருந்து ஐரோப்பா நோக்கி வந்த தமிழ்அகதிகளும்,இந்திய,பாகிஸ்தானிய தொழிலாளரும் அவலமாக விறைக்கும் குளிரில் கடலில்மூழ்கி இறந்தமைக்கு,தத்தம்நாட்டு அரசியல்வாதிகள் மட்டுமன்றி, காசாசையும் மனிதாபிமானமுமற்ற மாலுமிகளும்,எல்லைகளை இறுக்கிமூடும் ஐரோப்பியநாடுகளும் தான் காரணம் என பலர் கூறுகிறார்கள்.

தத்தம் நாட்டையும்,மக்களையும் போரிலும்,வறுமை,வேலையின்மை, அறியாமை,மனிதஉரிமைமீறல்,லஞ்சஊழல் மோசடிகளில் தவிக்கவிட்டு தாம் மட்டும் கோடிகோடியாக கறுப்புபணத்தை ஐரோப்பா,அமெரிக்காவில் பதுக்கிவிட்டு,அந்தநாடுகளின் உயர்வருமான ஆயுதகொள்வனவையும் ஊக்குவித்து,,கமிசனையும் பெற்று,தம்நாட்டு கரன்சிமதிப்பை உலகவங்கி ஆலோசனைப்படி காலத்துக்குகாலம் குறைத்துமூலப்பொருட்களையும் மலிவாக பணக்காரநாடுகளுக்கு வழங்கும் ஆசிய ஆபிரிக்க அரசியல்வாதிகள் எப்போது,கிடைத்த சுதந்திரத்தை மக்கள் அனுபவிக்கச்செய்வர்?என்பதே தற்போது நம்முன் உள்ள கேள்வி! மீண்டும் நம்மை காலனிநாடுகளிடம் மண்டியிடவைப்பதா?மேற்கில் பயின்ற,அரசியல்வாதிகளின்,நோக்கு! பணத்தை குறுக்குவழியில் தேடும் குரூரஎண்ணம் கொண்ட மாலுமிகள்,ஆட்கடத்துவோர் பற்றி தமிழர்க்கு நிறையவே அண்மைக்கால அனுபவம் இருந்தும் மீண்டும் மீண்டும் விட்டில் பூச்சி விளக்கில் விழுவதுபோல் விழுவது தத்தம் நாட்டு தரித்திர நிலைமையாலேயே என்பதில் சந்தேகமேயில்லை.

தமிழர்கள்,அவலத்திற்கு,அடிப்படைக்காரணமான தேசிய,பிராந்திய,அரசியல்தலைவர்கள் தாமாகவே,உணர்ந்து,தவறைத் திருத்தாவிட்டால் ஆண்டவனாலும் உதவமுடியாது.

**வாசகர் கடிதம்:**

**அன்புடையீர்,**

சர்வதேசதமிழர் கண்டு மனம்மகிழ்தோம்.இத்துடன் சந்தாவும் அனுப்பி ஊக்கம் தரவிரும்புகிறோம். சர்வதேசதமிழர் கவியரங்கு ஒரு உன்னதநிலையை அடைந்திருக்கிறது,எனக்கூறினால் அது மிகையாகாது!சிலகவிதைகளில் சோகமும்,வேதனையும் சேர்ந்துமனதை சஞ்சலப்படுத்துகிறது.இத்தகைய கவிதைகள் வாழ்க்கையில் சோதனைகளை அனுபவிப்பவர்களுக்கு வேதனையாக இருக்கிறது.

டாக்டர் ஆ.விசாகரத்தினம் எழுதிய பிரபஞ்சமர்மம் கட்டுரையில்–கீச்சுமாச்சு தம்பலம்!கீயோ மாயோ தம்பலம்–பாட்டை ஒருசிறுபிள்ளை விளையாட்டாகவே நாம் அறிந்திருந்தோம்.அதனுள் இவ்வளவு அர்த்தம் இருக்கிறது,என்பதை ப்புரியவைத்து,எம்மை சிந்தனையுள் ஆழ்த்திவிட்டார்.

வல்வை பா.பாலேந்திரனின்–வாழ்க்கை ஒரு ஒப்பந்தம்–சிறுகதையில் பாடசாலை வாழ்வை கண்முன் நிறுத்தி,திடீரென எடுக்கும் முடிவும்,உலகில்,பாமரமக்களின்,வாழ்க்கை கஸ்டங்களையும்,நாட்டுநிலைமையால் மக்கள்படும் அவலநிலையையும் எடுத்துக்காட்டிவிட்டார்.

சர்வதேச தமிழர் சஞ்சிகை குதூகலத்துடன் திகழவேண்டும் என நல்லாசி கூறி விடைபெறுகிறேன்.

**திருமதி.கமலா வேலுப்பிள்ளை**
**பொற்ஸ்வானா-ஆபிரிக்கா**

---

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

மனிதநேயத்தின் உயர்ந்த எதிர்பார்ப்புடன் இம்மடலை வரைகிறேன். இந்தியாவில் பெங்களூர்,ஜாக்கூரில் 230 இலங்கை தமிழ்குழந்தைகள் பசிக்கொடுமையில் தவிக்கின்றன. இந்தப்பாலகர்களுக்கு பால்வார்க்க உலகத்தமிழர் முன்வரவேண்டும்! என்குடும்பத்தினர் இந்தியாவில் இருந்தபடியால் தமிழ்நாட்டுஅகதிமுகாங்களுக்கும் விஜயம்செய்வேன். பெங்களூர் அகதிக்குழந்தைகள் கல்லூரிக்கும் என் பங்களிப்புண்டு. நிர்வாகிகளுடனும் நெருங்கியதொடர்புண்டு.சர்வதேச மன்னிப்புசபையிலும் அங்கத்தவன்!

கடந்தஆண்டு இப்பாடசாலையைப் பார்த்து மனம்நொந்துபோனேன். திரும்பிவரும்போது இணைப்பாளர் தி.திலீபனை ஒஸ்லோவிமானநிலையத்தில் சந்தித்ததால் விடயத்தை சர்வதேசதமிழர் மூலம் வெளிச்சத்துக்கு கொண்டுவர முடிந்தது. குறைந்தளவு அனுதாபிகளையாவது இவர்கள் பக்கம்திருப்பவேண்டும் என்பது என் அவா!இதற்கு சரியான விளைநிலம் சர்வதேசதமிழர் தான்!என சிலநண்பர்கள் கூறி சில இதழ்களையும் வழங்கினர். சர்வதேசதமிழர்,எனும் சிறியஇதழின் ஆழம்,அகலம்கண்டு,மனம்திருப்தி அடைந்தேன். திலீபனை சந்தித்த நினைவும் வந்தது. பத்திரிகையின் நோக்கங்கள்,அமைப்பு என்னைக் கவர்ந்தன.

என்எதிர்பார்ப்பு இப்பாலர்களுக்கு யாராவது, ஏதாவது உதவிசெய்ய வேண்டும் என்பதே!

தனிமனிதர்களோ,அமைப்புகளோ உடனுதவிட சர்வதேசதமிழர்மூலம் அறைகூவல் விடுக்கிறேன்.

உண்மையான அகதிகள் தமிழ்நாட்டிலும்,இலங்கையிலும் தான் உள்ளனர்.அவர்கள் வாழ்க்கை சீர்படவேண்டும்.றெட்பாணா,நோராட் தமிழ்அகதிக்குழந்தைகளை முன்னுரிமைப்படுத்த தாங்கள் உதவுக! இந்தியாசெல்லும் தமிழர் பெங்களூர் தவறாதுசென்று இப்பாலர்களுக்கு உதவவேண்டும்.நோர்வேஜிய,ஐரோப்பிய,உதவிநிறுவனங்களிடம் அமைப்புரீதியாக அரசியலுக்கு அப்பாற்பட்டு உதவும்படி வேண்டுங்கள்!

**பொதுசேவையில் விருப்புள்ள,**
**நா.கனகசிங்கம், Tel.57791398**
**PB.13,6913 KALVÅG,Norway**
***R.Vijayaraj/Principal,**
**Indira Gandhi Intl.Academy,**
**Jakkur 10/2,Bangalore 560064**
**India.(A/c nr.15077,Corporation Bank Yelahanka Branch.)**
(அதிபரின் கடிதம்,பத்திரிகைசெய்தி றெட்பாணா தலைமைஅலுவலகத்துக்கு சியார்கடன் ரெலி.:பக்சில் அனுப்பப்பட்டுளது)

---

**அன்பின் ஆசிரியருக்கு,**

நான் காரைநகர்,பலகாடுகிராமத்தைச்சேர்ந்தவன்.கடற்படைமுகாமருகில் வீடுஇருந்ததால் முல்லைத்தீவு இடம்பெயர்ந்து,1990ல் திருச்சி வந்தேன்.தந்தையார் வவுனியாவில் 1991ல் மிதிவெடியில்சிக்கி இடதுகாலை இழந்தார்.அண்மையில் ஈழத்திலிருந்து வந்த தமிழ் அகதிகட்கு,நம்மாலானஉதவிகளை செய்கிறோம்.அரசுஉதவிப்பணம் உண்டு எம்முகாமில் யாழ்,திருமலை,முல்லை,மன்னார்,மாவட்டமக்கள் உளர் சர்வதேசதமிழரை, அனுப்பியுதவுக!

**பீ.விக்னேஸ்வரன்-திருச்சி 15**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

குகனேறியப்பன்;போலவோக:இரா.விஜய;போட்ஸ்பியுட்:க.சுரேஷ்கரன் பிறத்வோக்: குமார் கிறஓகர்:ஜ.பி.ரவீந்திரன் கல்வோக்:கனக
சிங்கம்.நா. பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன் 181.4270839;ந.பாலமுரளி181.4729336;திருமதி.த.மனோகரன் 181.4713060;மு.ஆறுமுகம்
செ.நாகேந்திரன் 181.5532190கனடா:மா.மகிந்தன்:இ.வளர்மதி; நியுசிலாந்த்:தி.திருநந்தகுமார்,சு.பாஸ்கரன்,பின்லாந்த்: இ.சிவலிங்கம்
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி/அண்ணா பல்கலைக்கழகம்/44.2351723161;பேராசிரியர்.ஜ.இராமச்சந்திரன்

**அன்புள்ள ஆசிரியருக்கு,**
இதயங்கனிந்த புத்தாண்டுவாழ்த்து
க்கள்! பொங்கலோ பொங்கல்!!
நலம்!நலமறிய ஆவல்!!நாம் கடந்த
மார்கழியில் நியுசிலாந்து
குடிபெயர்ந்தோம்.வரும்போது மெல்
பர்ன் நகரை பார்த்துவந்தோம்.
ஆக்லாந்து அழகானநகரம்!நிறைய
தமிழர்கள்(குறிப்பாக இலங்கைத்
தமிழர்கள்) உள்ளனர்.தமிழ்சங்கம்
இயங்குகிறது.அடிக்கடி நிகழ்ச்சி
கள் நடைபெறுகின்றன. இந்தியக்
கடைகள் உள்ளன.எல்லாப்பொருட்
களும் கிடைக்கின்றன.எங்களுக்கு
நியுசிலாந்து பிடித்திருக்கிறது.
சர்வதேசதமிழர் அபிமானி தி.திருந
ந்தகுமார் எம்மை சந்தித்து நலம்
விசாரித்தார்கள். தமிழகசிறப்பிதழ்
விரைவில் வெளிவரும் என எதிர்
பார்க்கிறோம்.உலகதமிழ்பண்பாட்டுக்
கழகம்,டாக்டர்.இராசநாதன் தலை
மையில் சிறப்பாகஇயங்கிவருகிறது.
நியுசிலாந்து சிறப்பிதழ் வெளியிட
ஆசைப்படுகிறோம்.தங்கள் அனுமதி
யும்,ஒத்துழைப்பும் தேவை.
சகலருக்கும் எம்அன்பைத்தெரிவிக்
கிறோம்.மிக்கநன்றி!
**சு.பாஸ்கரன்,நியுசிலாந்த்**
(நியுசிலாந்த்-சிறப்பிதழை 10-12பக்.
.கணனியில்,தயார்பண்ணி,புகைப்பட
ங்களுடன் அனுப்பிஉதவும்படி
சிறப்பாசிரியர்கள்:சு.பாஸ்கரன்,தி.திரு
நந்தகுமார் ஆகியோர் அன்புடன்
கேட்கப்படுகின்றனர்.உலகின்,எப்பகு
தியிலிருந்தும்,சிறப்பிதழ் வெளியிட
தயவுசெய்து,தொடர்புகொள்க!ஆ.ர்)

---

**அன்புடையீர்,**
சர்வதேச தமிழர் கண்டு ரொம்ப
சந்தோசம் அடைந்தோம்.பரந்து
வாழும் தமிழரினம் ஒன்றுபடுவத
ற்காக இயங்கும் இப்பத்திரிகைக்கு
எம் பொறுப்பும்,பங்களிப்பும் அவசி
யம் தேவை என உணர்கிறோம்.
சர்வதேசதமிழரை இங்கு அறிமுக
ம்செய்கையில்,இலங்கைப்பிரச்சனை
பற்றி விளக்கம் சொல்லவேண்டிமி
ருக்கிறது.அதனால் இலங்கைதமிழ
ர் போராட்டவரலாறு பற்றிய நூல்
களை வாசகர்களிடமிருந்து எதிர்
பார்க்கிறோம்.இலங்கை-இந்தியகட்
சிகள்,போராளிகள் தமது தற்போ
தைய,எதிர்கால அரசியல்நிலைகள்,
நோக்கு,போக்கு பற்றி சர்வதேசதமி
ழர் மூலம் விளக்கம்,விவாதம்
அளிப்பின் மிகவும் வரவேற்போம்.
**R.Nixon,PB.12032,Darin 31911**
**Al-Qatief, SAUDI ARABIA**



**அன்பின் ஆசிரியருக்கு,**
சர்வதேசதமிழர் பற்றி பெங்களூர்
தமிழ்சங்க நூலகத்தில் அறிந்து
மேலும் ஆர்வம் கொண்டுள்ளேன்.
இலக்கியஆர்வம்-கவிதை,நாவல்க
ள்,தமிழில் அதிகஆர்வம் உண்டு.
சர்வதேசதமிழரை தொடர்ந்துபெற
விரும்புகிறேன்.வீழ்வது நாமாக
இருந்தாலும்,வாழ்வது தமிழாக
இருக்கட்டும்.வெல்க தமிழ்! இழப்
பது எதுவாக இருப்பினும்,வளர்ப்ப
து தமிழாக இருக்கட்டும்.அனைத்
து தமிழ்உள்ளங்கட்கும் அன்புகல
ந்த நன்றி!அனைவருக்கும் பெங்க
ளூர்தமிழர் சார்பில் பொங்கல்நல்வா
ழ்த்துக்கள்!மறப்போம் பழைய-தை
வரவேற்போம் புதிய-தை!இறுதிமூ
ச்சு உள்ளவரை இனிய தமிழ்
வளர்ப்போம்!
**இரா.ப.முரளி -பொறியியலாளர்**
Multi Tech Systems,466,1st floor,
15th cross,Wilson garden,
Bangalore 560030 tel.2219666
(பெங்களூர் தமிழ்சங்கம், ஜாக்கூரில்
உள்ள 230 ஈழதமிழ்அகதிகுழந்தைகட்கு
உடனே உதவிடவேண்டும்! என அன்பு
ரிமையுடன் வேண்டுகிறோம்! பெங்களூர்
கடிதம்,ஆக்கங்கள்,பெங்களூர்,தமிழர்களிட
மிருந்து எதிர்பார்க்கிறோம்! ஆ-ர்

---

**இனிய ஆசிரியநண்ப,**
நலம்!நலம் மலர்க!சர்வதேசதமிழர்
கண்டு மிக்க மகிழ்ச்சி!மிக்கநன்றி!
தாங்கள் அனுப்பிய சர்வதேசதமிழர்
இதழ்களை பலஇலக்கிய,பொது
சேவை நண்பர்கட்கு அறிமுகம்
செய்துள்ளேன். நாளுக்குநாள் சர்வ
தேசதமிழர்இதழ் வளர்ச்சியடைந்தே
வருகிறது.பாராட்டுக்கள்!!நன்றி!!
**சீ.அருணாசலம்,**
**பகாவ்- மலேசியா**

---

**மதிப்புக்குரிய ஆசிரியருக்கு,**
தாங்கள் அனுப்பும் சர்வதேசதமிழர்
இதழை சகலஅகதிகளும் படித்து
வருகிறோம்.ஆழமான நன்றிகள்!
தமிழகமுதல்வருக்கு எம்மை
விடுதலை செய்யுமாறு ஆதரவுகடி
தங்கள் அனுப்புமாறுகோரியமைக்கு
மிக்கநன்றி!நீதிமறுக்கப்படும் தமிழ
ருக்கு குரல்கொடுக்க சர்வதேசதமி
ழர் தயங்காது என்பதை மீண்டும்
வெளிப்படுத்தியுள்ளீர்கள்!எம் விடுத
லைக்கான,தங்கள்முயற்சி ஆறுதல்,
நம்பிக்கையை தருகிறது.7ம்வருட
சிறை வாழ்வை தொடங்கியுள்ள
எனக்கு தங்கள்ஆதரவு மிகநம்பிக்
கையை தருகிறது.வாழ்த்துக்கள்!
இங்குள்ள அகதிகட்கு நிதிஉதவி
செய்யவிரும்புவோர் பின்வரும்
வங்கி இலக்கத்திற்கு அனுப்பலாம்.
S.Balachandran,c/o.S.Sivapragasa
m,A/c Nr:C/192,State Bank of
India,Melur-0258
Address:Special Camp,/Br.prison,
MELUR-625106,Madurai,India

---

**அன்பு ஆசிரியருக்கு,**
புதுச்சேரி அரியங்குப்பத்திலுள்ள
இராவணன் பகுத்தறிவுஇலவசநூ
லகத்தில் 30.11.96,ஈழதமிழர்ஆதரவு
பொதுக்கூட்டம் நடைபெற்றது.
நூலகபொறுப்பாளர் ஆனந்த்
வரவேற்றார்.தமிழ்தமிழர் இயக்க
செயலர் தியாகு,ஈழத்தமிழர் விடிவு
களத்தில் புலிகள் காணபோகும்
தமிழீழத்தால் தான் ஏற்படுமென்றார்
பாலச்சந்திரன் போல் சிறையில்வாடு
ம் தமிழர்கட்கு பொதுநலவழக்கு
தொடரவிருப்பதாக கூறினார்.
8 மத்தியஅமைச்சரை தமிழ்நாடு
பெற்றிருந்தும்,காவிரிநீர் பெறமுடி
யாநிலையை கண்டித்தார்.தமிழர்
இலங்கைஅரசின்,இனப்படுகொலை
யை கண்டிக்கவேண்டும் எனவும்
கூறினார்.கு.பாஸ்கரன்,சட்டசபைஉ
றுப்பினர் சி.இராம்சிங்,ஈழமக்கள்ஆத
ரவு கூட்டடமைப்பு இரா.அழகிரி
சு.அகிலன் மற்றும் பலர் பேசினர்.
9-1-97புதுச்சேரி,சிங்கப்பூர்திருமண
நிலையத்தில் பன்னாட்டுதமிழர் கல
ந்துரையாடல் நிகழ்ந்தது.அமெரிக்
க உலகதமிழர்அமைப்பு தணி.கே.
சேரன்,முல்லை,ஆசிரியர் முத்துவே
ல் செல்லையா,உ.த.ப.இ,தலைவர்
பேராசிரியர் இர.ந.வீரப்பன்,புதுச்சேரி
தமிழமைப்புகள்,கட்சிப்பிரமுகர்கள்
கலந்துகொண்டனர்.தமிழீழத்தை
அங்கீகரிக்கவேண்டும்-எனும்,தீர்மா
னமும் நிறைவேற்றப்பட்டது.ஈழமக்
கள் ஆதரவுகூட்டமைப்பு இதனை
ஆதரவு செய்திருந்தது.
லண்டன் சிறப்புமலர் சிறப்பாகஇரு
ந்தது.வெள்ளிங்கிரி,ஆனந்தவரதன்,
ஆக்கங்கள்,கவிதைகள்,பனிப்பூக்கள்
ஆசிரியர்கருத்து மிகச்சிறப்பாகும்!
**புதுச்சேரி.ச.வேல்முருகன்.**
**(இராவணன் பகு.இ.நூலகம்**
**ஆர்.கே.நகர்,அரியாங்குப்பம்**
**புதுச்சேரி605007 ,இந்தியா)**

www.tamilarangam.net

திரைக்கலைஞர்.பிரசாந்த்:சேலம்:இராசமாணிக்கம்திருச்சி:ஜான்ராஜ்தேவர்: டாக்டர் சாந்தி மதுரை: இரா. இரவி:க.இலக்குமணசுவாமி புதுச்சேரி:ச.வேல்முருகன் கல்கத்தா: பி.சத்யநாராயணன்; டெல்லி:சுந்தரேசன்,ரவி ராமானுசம்,கதிர்.சம்பத்குமார் கேரளா: ச.வெள்ளிங்கிரி; டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்.கைதராபாத்: என்.ஆர்.இலட்சுமணன்; பெங்களூர்:இரா.ப.முரளி

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

நீண்டகாலம் மடல் எழுதாமைக்கு என் மன்னிப்புகள்!சர்வதேசதமிழர் தொடர்ந்து கிடைக்கப்பெறுவதற்கு நன்றிகள்!மகிழ்ச்சி!!

மதுரை சிறையில் இருந்து பாலச் சந்திரன்,எழுதியது மனதுக்கு கவலைக்குமேல் கவலையை தந்தது. நீதி தவறியமைக்கு தீக்கிரையான மதுரையிலா இன்று அநீதி தாண்டவமாடுகிறது,என நினைக்கையில் மனம் துடித்து வெதும்புகிறது. தமிழகமுதல்வர் இவ்வாறு சுற்றவாளிகள் தமிழக சிறையில் வாடுவதை உடன் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பாலேந்திரனின் வாழ்க்கை என்றோர் ஒப்பந்தம்,நக்கீரனாரின் தமிழ் கேட்கும்-கட்டுரை,என்பன சிறந்தவை!

பனிப்பூக்கள் விறுவிறுப்பான சிறந்தகதை!எனினும்,பெற்றோர் மகளை கண்டித்தாலும்,தனியே தாய்நாட்டில் விட்டதால்,கடமையிலிருந்து தவறியவர்களாகவே கருதப்படுவர்.காரையூரானுக்கு எம்வாழ்த்துக்கள்!

அன்றையமௌனம் இன்றையஅவலத்துக்கு காரணம்!இன்றையமௌனம் நாளையஅழிவுக்கும் காரணமாகும்-எனும் ஆசிரியர்கருத்து எவ்வளவு உண்மையானதாகும்!

**மதுமாரி- திருகோணமலை**

---

**மதிப்புக்குரிய ஆசிரியருக்கு,**

முதலில் எம் இனிய புதுவருட பொங்கல் வாழ்த்துக்களை சர்வதேசதமிழர்,வாயிலாக உலகத்தமிழர்கட்கு கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியும்,பேரானந்தமும் அடைகிறோம் .சர்வதேசதமிழர் வாயிலாக உலகின் பலபகுதிகளிலும் வாழும், தமிழர் புதினங்களை வாசகர்கள் அறிந்துகொண்டு,அறிவையும் வளர்த்துக்கொள்ள தாங்கள் செய்யும் தொண்டு,அளப்பரியதொன்றாகும். தங்கள் இலக்கிய,பொதுப்பணி தொடரவும்,தமிழர்அறிவு பெருகவும் ஊக்குவிக்கவேண்டியது எழுத்தார்வம் உள்ளோரதும்,தயாளசிந்தை உள்ளோரதும் கடமையாகும்! தங்களுக்கு எம்பாராட்டுகளும்,வாழ்த்துகளும்,என்றென்றும்,உரித்தாகும்

**R.Sugumar,Onezhskaya No.17-4 #104>Moscow 125438,Russia**

---

**விளம்பரம்:பிறந்தநாள் வாழ்த்துக்கள்,திருமணவாழ்த்துகள் மற்றும் சகலவரிவிளம்பரங்கள் சர்வதேசதமிழரில்,இடம்பெறும்**

## *விபீஷணனின் கவிதைக்கு காரமான ஒரு விமர்சனம்!*

சர்வதேசதமிழர் கடந்த இதழில் வெளிவந்த பிறப்புக்கு அர்த்தம்-எனும் விபீஷணனின் கவிதைக்கு எனது விமர்சனத்தை முன்வைக்கிறேன்.இதனால் தமிழர் மத்தியில் கவிதைகள் பற்றிய விமர்சனக்கண்ணோட்டம் அதிகரிக்கலாம் என எண்ணுகிறேன்.

இன்று இலங்கையில் நடக்கும் கொழும்புஅரசியலின் குளறுபடிகள், யுத்ததந்திரம் புரியாத ஒருவரின் கவிதை ஆக்கமாகவே பிறப்புக்கு அர்த்தம் எனும்கவிதை அமைந்துள்ளது.

இலங்கையில் தொடரும் போராட்டத்தின் வளர்ச்சி யாவரும்அறிந்தவிடயம்!போராட்டத்தின் இழப்புகளின் மதிப்பீடுகளிலேயே வெற்றி,தோல்வி நிச்சயிக்கப்படுகிறது.பாரதப்போராயினும் சரி,இராமயணப்போராயினும் சரி,உலகயுத்தங்களாயினும் சரி இழப்புகளினால் தான்,வெற்றிகொள்ளப்பட்டது.

லட்சக்கணக்கில் வலிகாமம் மக்களை இடம்பெயரவைத்து, நூற்றுக்கணக்கில் மக்களைக்கொன்று குவித்தே சந்திரிகாஅரசு யாழ்ப்பாணத்தை பிடித்தது.

வன்னிமக்களை கொன்று, காட்டுக்குள் துரத்தியே கிளிநொச்சியைக் கைப்பற்றியது சிங்களப்படை. தன் ஆட்சியை தொடர்வதற்காக மேற்கூறிய தமிழினஅழிப்புபோரை தொடர்ந்து நடாத்தும் சிறிலங்காவுக்கு எதிராகபோராடுவது எந்தவகையில் விளங்கவில்லை என விபீஷணன் கூறுகிறாரோ,என்பதுதான் எனக்குப்புரியவில்லை.

சிங்களஇளைஞர் பலர் யுத்தத்தை விரும்பாதவர்கள்.வேலையின்மை நிமித்தமே அவர்கள் படையில் சேருகிறார்கள்.அவர்கள் மிருகங்களல்ல.சிங்களபேரினவாத அரசியல்தலைவர்களாலேயே அவர்கள் யுத்தத்தில் மூழ்கடிக்கப்பட்டு தந்திரமாக அழிக்கப்படுகிறார்கள்.

பிரபாகரனின் பிறந்தநாள் என்பது யுத்ததந்திரமேயன்றி வேறுஒன்றுமே இல்லை.தந்திரமின்றி யுத்தம்புரியவியலாது.போராட்டம் சிங்களமண்ணை அபகரிக்க அல்ல!தமிழர் மண்ணில் தமிழனை அழிக்கும் படைகளை துரத்துவதற்கான போராட்டமே இது!

சிங்களபடைகள் தமிழ்மண்ணைவிட்டு தம்மண்ணிற்கு போனால் தெற்கில்,சாக்குரல் எப்படிகேட்கும்? விபீஷணன் அவர்களே!

போராளிகள் சிங்களமண்ணிற்கு போய் நின்றா போராடுகிறார்கள்? போராளிகட்கும்,மாவீரர்கட்கும் வித்தியாசம்தெரியாமல் கவிதை எழுதிய கவிஞர்,இதுவரையில் தமிழினத்துக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு எத்தனை கவிதை எழுதினார் என்று புரியவில்லை!

இன்றைய நவீனஉலகில் வெற்றியும்,விடுதலையும் எதனால் தீர்மானிக்கப்படுகின்றன,என்பதை விபீஷணன் அறிந்துகொள்ளாமல் இருப்பது ஆச்சரியமே!

***நா. இந்திரன்,***

***7600 லவன்கார், நோர்வே***

**சர்வதேசதமிழர் கவியரங்கு**

**முல்லைத்தீவு வெற்றி!**

முல்லைமாநகரின் கடலோரத்தில்
முற்றுகையாயிருந்தசிங்களஆமி
பல்லைஉடைத்து பாய்ந்தோட
பாயும்புலிவீரர் வழிகண்டார்!

இராணுவமுகாம்தனை அழித்தனர்
இரண்டாயிரமுடல்களைகுவித்தனர்
எங்கும் காணா புதுமையிது
எம்புதுநகர் கண்டபுதுமையிது

ஆட்லறி பீரங்கி துப்பாக்கிகள்
ஆயுதங்கள் எல்லாம் புதுரகமே
காட்டமான கனரகம் எல்லாமே
கண்டனர்!அள்ளினர் நம்மவரே!

உணவுப்பொருட்கள் தாராளம்!
ஊர்திகளில் ஏற்றினர் நம்மவரும்.
காணக்கண்கொள்ளா காட்சியது,
கடலில்படகு,வானில்ஊர்தி சிதறின!

புலிகளின்வீரம் கண்டிட்டே-சிங்கள
பூனைகள் ஓடின தலைதெறிக்க!
பலியானோர் பலர்,பதுங்கியோர் பலர்
பாழுங்கிணற்றிலும் வீழ்ந்தார் பலர்

வற்றாப்பளைஅம்மன்துணையுடன்
வலிய தமிழீழதலைவர்துணிவுடன்
கற்றறியா மூடராணுவம் ஒழிந்தது
கவலைகள்நீங்கினர்,முல்லைமக்கள்

தமிழர்பகுதியை முற்றுகைசெய்து
தாங்காதகொடுமைகள்தனைசெய்து
அமிழ்தம் எடுக்கமுடியாது என்றறி
அம்மே!சந்திரிக!வென்றிடு மனதை

**பிரியா-----------பிலோமினா**

**முல்லைத்தீவு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரஷ்யா/மாஸ்கோ: முருகேசம்பிள்ளை ஆர்.சுகுமர் சவுதிஅராபியா/ அல்.கதிவ்: அ.நிக்சன் றியாட்: பி.யோகநாதன்
ஜித்தா:எஸ்.காளிதாஸ்துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஐ.ரபீக் ஓமான்:எஸ்.கண்ணன்.கணேசலிங்கம்
சுவீடன்:எம்.என்.பாலாஸ்; பி.ஜெகதீசன்; ஜேர்மனி:க.செந்தில்;0230478452;த.புவனேந்திரன்: 0230474391; நெதர்லாந்த்:எஸ்.அருள்

## மாப்பிள்ளைகளை கொடுமைப்படுத்தும் மாமியார்கள்!

தமிழ்நாடு சிதம்பரனார் மாவட்டத்தி லுள்ள திருவைகுண்டம் தாலுகா! இங்கு 14 கிராமங்களில் வாழும் நன்குடி வேளாளர் இனத்தில்தான் இப்படியொரு சிக்கல். விசாரித்த பொழுது கிடைத்த தகவல்கள் வினோதமானவை. முதலில் சென்ற கிராமம் சிவகளை. இது தான் இச் சமுதாயமக்களுக்கே தாய்க் கிராமம். இங்கே ஆண்கள் கொடு மைப்படுத்துவதற்கு காரணமாக ஒருகதை புழங்குகிறது.. ஒரு காலத்தில் ஒரு பெண்ணின் கணவன் குடிபோதையில் தனது மனைவியை அடித்துக் கொடுமை ப்படுத்தினானாம். ஒரு நாள் அவள் தாலியைப்பறித்து ஒரு உரலில் போட்டு இடித்து உடைத்தெறி ந்து விட்டானாம். அதற்குப்பிறகு தான் பெண்கள் தத்தமது வீட்டு ஆண்களுடன் மோதத் தொடங்கி னார்களாம்.

குடும்பச்சொத்துக்கள் பெண்களிட ம் தான் இருக்கவேண்டும். தாலியை பெண்வீட்டாரே செய்து போட்டால் தான் கணவனால் தாலியைப்பறிக்கமுடியாது. மணமகனும் மணமகளின் வீட்டிற்கே வந்துவிடவேண்டும். மாமியார் மனைவியின் உத்தரவு களுக்கு கீழ்படிய வேண்டும் என்று அப்போது பெண்கள் சில வாய்மொழிச்சட்டங்களை இயற்றியிருக்கின்றனர்.அன்றைய ஆண்களும் இவற்றை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

அன்று நாங்கள் செய்த தவறுகள் தான் இன்று எங்களது அடிப்ப டை உரிமைகளுக்கே எமனாக வந்து நிற்கின்றன, என்கின்றனர் , அந்தச்சமுதாய ஆண்கள். இவர்களில் பலர் பெயரைக்கூட கூ றப் பயந்தது குறிப்பிடத்தக்கது. ஆனால் ராம்குமார் என்ற இளை ஞர் மட்டும் துணிச்சலோடு முன் வந்தார். திருமணமான பிறகு மனைவி வீட்டில் தான் தங்க வேண்டும்,என்ற விதி முறையை முதன்முதலில் மீறி தனது மனைவியுடன் இவர் தனியே வா டகை வீட்டில்வசித்து வருகிறார். –எங்கள்சமுதாயத்தில் ஆண்களின் மறுபெயர் அடிமைகள்! ஆண்களுக்கு எந்த உரிமையும் பெண்கள் கொடுப்பதில்லை.நான் அரசு போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுனராக பணிபுரிகிறேன்.சம்பளம் வாங்கியவுடன்,மொத்தபணத்தையும் சம்பள கவருடன் எனது மாமியாரி டமோ மனைவியிடமோ கொடுத்து விடவேண்டும். தினசரி செலவுகளு க்குக் கூட மனைவிமூலமாக சொல்லி மாமியாரிடம் கேட்டால் தான் ஏதோ கிடைக்கும். வீட்டில் மனிதஜென்மம் என்ற அளவுக்குக் கூட மரியாதை கிடையாது. திடீரென உடல்நலம் கெட்டுவிட் டால் வீட்டில் பணம்தரமாட்டார் கள்.வெளியே வட்டிக்கு தான் வாங்கவேண்டும்..அதை அடைக்க ஓவர்டைம் செய்தால்தான் உண்டு. தொடக்கத்தில் மவுனமாக இருந்த நான் எனது மனைவியுடன் தனியாகப் போய்விடநீண்ட யுத்தமே செய்யவேண்டியிருந்தது. இப்போது சமுதாயகட்டுக்களையே எதிர்த்துக் கொண்டு தனியே வந்தாகிவிட்டது.தனியாக வந்துவி ட்டதால் என் மனைவியின் நகைகள் என்மனைவிக்கு வரவேண்டிய பணம் சொத்துக்கள் எதையுமே தர மறுத்துவிட்டார் எனது மாமியார்.பணமில்லாவிட்டா லும் சுயமரியாதை இருக்கிறதே என்று நாங்களும் எப்படியோ வாழ் ந்து வருகிறோம் என்று குமுறினார். உடல் ஊனமுற்ற இவரது மனைவி மகாலட்சமி சமீபத்திய உள்ளுராட்சித் தேர்தலில் சிவகளை பஞ்சாயத்துத்தேர்தலில் போட்டியிட்டு வென்றிருப்பவர். அவர் எனது கணவரின் சுயமரியாதை காற்றில் பறந்தபோது பெற்றாரா ?கணவரா? என்ற நீண்ட மனப்போராட்டத்திற்கு பிறகு கணவரே நிரந்தரம் என்று வந்துவிட்டேன். அம்மா பணமோ நகையோ தரமறுத்துவிட்டாலும் இவருடைய மாதவருவாயில் மகிழ்ச்சியாக உள்ளோம்.

ஆண்களை அடிமைகளாக நடத்துவது எனக்கும் பிடிக்காததால் தான் பெற்றதாயை எதிர்த்து கணவருடன் வந்துவிட்டேன் என்றார். இந்தப் பெண்ணின் தந்தையும் நன்குடி வேளாளர் ஐக்கிய சங்கத்தலைவரு மான சுப்பையா,எங்கள்சமுதாயத்தில் பெண்கள் ஆதிக்கம் இருப்பதற்கு காரணம் சொத்துரிமைதான். நான் தமிழகஅரசுத்துறையில் பணியாற்றி ஓய்வுபெற்றவன். நான் வேலையில் இருக்கும் போதே என் மனைவி வீட்டைவிட்டுப் போகச்சொல்லி விட்டாள். எனது வருவாயை அவளிடம் கொடுக்காதது தான் காரணம். என்ன செய்வது? சமுதாயக்கட்டுப்பாடு இருக்கிறதே என்றார்.

எம். முருகன் என்பவர் கூறும் போது கல்யாணம் என்றாலே பயமாக உள்ளது.ஏற்கனவே அடிமை வாழ்க்கைதான் வாழ்கி றோம்.கல்யாணத்திற்குப்பிறகு மனைவிக்கும் மாமியாருக்கும் முழு அடிமையாக வேண்டும். இ தை ஒழிக்க காதல் கல்யாணம் தான் ஒரேவழி என்றார்.இன்னொரு இளைஞரான வடிவேல் எங்கள் சமுதாய பெரிசுகள் முக்கியமாக பெண்கள்தான் இந்தஇழிநிலைக்கு காரணம். கலியாணமான பிறகு பெற்றதாய் தந்தையைப் பார்க்கக் கூட மனைவியிடமும் மாமியாரிட மும் பெர்மிசன் கேட்கவேண்டிய நிலையில் உள்ளோம் என்றார். அடுத்துப் பேசிய ராமகிருஸ்ண ணின்,பேச்சில் ஆதங்கம்தெறித்தது. எங்களது சமூகத்தில் ஆண்கள் அரசுப்பணியில் இருந்தால் மட்டுமே பெண்தருகிறார்கள். அரசுப்பணியில் இல்லாத ஆண்களி ன் நிலை திருமணத்திற்குப் பிறகு இன்னும்மோசம்.ஆத்திரஅவசரத்திற் குநகைகளை அடகுவைத்து தொழில் நடத்தக்கூட மாமியார் அனுமதி கிடைக்காது. எங்களையும் மனிதஜென்மமாக மனைவியும் மாமியாரும் மதிக்க வேண்டும் என்றார். அதேவேளை சிவகளை சுப்பையா போன்ற சில ரோ எங்களது பழக்கவழக்கங்கள் புராதனமானவை.அது அப்படியே நீடிப்பதில் எந்தச்சிக்கலும் இல்லை. அதைமீறுவது குற்றம் என்கிறார். மடிவைத்தானேந்தல் கிராமத்தில் உள்ள இளங்கோவேள் என்ற பெரியவர் எங்கள் சமுதாய இளைஞர்கள் வேலை வெட்டி இ ல்லாமல் கிராமத்தை வலம் வருகி றார்கள்.எல்லாவற்றிற்கும் காரணம் உலக நீரோட்டத்திற்கு ஒவ்வாத எங்கள் பழக்கவழக்கங்கள் தான் என்றார்.இந்தக் கிராமத்தில் இவரை ஆணடிமை இளங்கோ வேள் என்றெஅழைக்கிறார்கள்.நான் சுயமரியாதையோடு இருந்ததால் என் மனைவி என்னை வீட்டைவி ட்டே தள்ளி வைத்தாள். எங்கள் சமூகத்தினரின் தாய்கிராமமான சிவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டென்மார்க்:ச.யோகேந்திரம்;வ.க.பரமநாதன்; பிரான்ஸ்: பற்குணராசா,த.தர்மசீலன்1.43759171; இ.கிருபானந்தன், இ.கந்தசாமி
இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்41.684549 விதுரன்; க.சண்முகலிங்கம் பி.ஏ.எல்.எல்.பி;மா.தேவகௌரி பி.ஏ.சிறப்பு
கைதையூரான் குமரகுருபரன் பி.காம்.;சுகந்தி தில்லையம்பலம் யாழ்ப்பாணம்:பி.ஹம்சானந்தி; மட்டக்களப்பு: க.சபாரத்தினம்;

களையில் மாந்தோப்பு என்ற ஒரு இடம் உண்டு. வாழாவெட்டி ஆண்கள் இந்த மாந்தோப்பில் தான் கழிப்பார்கள் என்றார். முடிவைத்தானேந்தல் கிராமத்தில் சில ஆண்கள் மனைவி மகனால் அடித்தே கொல்லப்பட்டதாகவும் பட்டினி போடப்பட்டு சாகடிக்கப்பட்டதாகவும் கதைகள் உண்டு. இந்தக் கிராமத்துப் பஞ்சாயத்து தலைவரான வீரமாகாளி தான், இந்தப்பகுதியின் புதுமைப்பெண். மிக இளவயதிலேயே விதவையான இவரும் அதே சமூகத்தைச் சேர்ந்தவர்.ஆனால்,சற்றே வித்தியாசமானவர்.விதவைகளும் எல்லோரையும் போல் கலர்ப்புடவை உடுத்தலாம் என்பதை இவரது சமூகத்தில் முதன்முறையாகஅறிமுகப்படுத்தியிருக்கிறார். விதவை என்பதாலேயே இவரது,மருமகனிடம் பேசி தனது மகளுக்கு தாலிகட்டுவது,மாப்பிள்ளைஅழைப்பது போன்ற சுபகாரியங்களையும்செய்து புரட்சியும்செய்திருக்கிறார்.வீரமாகாளி பெண்களுக்கு சொத்துரிமை உண்டு என்று,அரசு சட்டம் கொண்டு வருவதற்கு முன்னாலேயே எங்கள் சமூகத்தில் இந்த வழிவழியான பழக்கமுண்டு இதற்கு காரணம் ஆண்கள் சொத்தை சீரழித்ததுதான். மற்றபடி ஆண்களை நான் கொடுமைப்படுத்துவதில்லை.என்னைக் கேட்டால் இது பெண்களுக்கு ஒரு அதிகப்படியானசுமை என்றேசொல்லுவேன். பெண் நிர்வாகத்தால் நல்லதுதான் நடக்குமே தவிர துன்பம் வராது என்றார். இந்த விசித்திரமான சமூகத்தைப் பற்றி சிலர் பி.எச்டி. ஆராய்ச்சி கூட செய்து வருகிறார்கள்.இந்த 14 கிராமங்களைச்சேர்ந்தவர்கள் தங்களது கிளைவழிப்பழக்கவழக்கங்களில் மிகவும் பிடிவாதமாக இருப்பதால் சித்தியின் மகனைக்கூட மணம்முடித்துக்கொள்வது ஒருவிசித்திரமான பழக்கம். சில மாவட்டங்களில் பெண் சிசுக் கொலை பரவலாக உள்ளது போல எங்கள்பகுதிகளில் ஆண்சிசுவதை இப்போது ஆரம்பித்திருக்கிறது. சில வயதான ஆண்கள் மர்மமான முறையில் இறந்து போகிறார்கள் என்று சிலஇளைஞர்கள் அச்சத்துடன் தெரிவித்திருக்கிறார்கள். கூடியவிரைவில் அந்தப் பகுதியில் ஆணுரிமை இயக்கங்கள் தோன்றி பெரிய அளவில் போராட்டம் நடத்தினால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஒரு புறம் பெண்களுக்கெதிரான கொடுமைகள் என்றால் இங்கே நேரெதிராக!

நன்றி.தமிழன் எக்ஸ்பிரஸ் 14-1-97
(அனுப்புனர்:
**புதுச்சேரி ச.வேல்முருகன்)**
**ஆசிரியர். சுதாங்கன்**
**தமிழன் எக்ஸ்பிரஸ்**
வசந்தி மெடிக்கல் சென்ரர்
3ம்மாடி,20பைகிராப்ட்ஸ் கார்டன் சாலை,நுங்கம்பாக்கம்,சென்னை-600034 (தொலைபேசி.-8231112.)

## சோவியத் இலக்கியம்:
## ஆரையம்பதி சபாரத்தினம்

நாட்டுக்கு நாடு மக்களுக்கு,மக்கள் கலாச்சாரங்கள் பழக்கவழக்கங்கள் ஆகியன மாறுபடுவதையும் ஓரிடத்தில் வெறுக்கப்படும் சிலபழக்கவழக்கங்கள் மற்றோரிடத்தில் மானசீகமாக ஏற்று மதிக்கப்படுவதையும் அல்லது பாராமுகமாகப் பேணப்பட்டு வருவதையும் கூடப் பார்க்கின்றோம். இவ்வாறான விடயங்கள் அடங்கிய நிகழ்ச்சிக் குறிப்புகள் பல்லினமக்களதும் பாரம்பரியங்களை அறியத்துடிக்கும் வாசகர்கட்கு பெருவிருந்தாகலாம் என்பதனாலேயே,சோவியத்ரூஸ்யாவில் மக்களிடையே இருந்து வரும் குதூகலிக்கத்தக்க சில வினோத சம்பவங்களை இலக்கிய நயத்துடன் தொகுத்தளிக்கின்றேன். வாசகர்கள் படித்து இன்புறுவார்களாயின் மகிழ்வடைவேன்.

**பஞ்சவர்ணக்கிளிகள்:**
பஞ்சவர்ணக்கிளிகளைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். சிலர் பார்த்தும் இருப்பீர்கள். இத்தகைய கிளிகள் சோவியத் ரூஸ்யாவில் ஏராளம்.
இவற்றை பாதையிலும் பயணச்சாதனங்களிலும் பொது இடங்களிலும் சந்திக்க நேரும். பாமரருக்குக் கூட வாய்திறந்து கவிதை பாடவே தோன்றும்.இவை பறக்கும் கிளிகள் அல்ல பாவையர் என்னும் பேசும்கிளிகள்!
நாமும் ஒரு பாடல் இயற்றிப்பார்ப்போமா?

1. மங்கிவரும் மாலை வெயில்
பொங்கிஎழும் நீரலைமேல்
தங்கமென மின்னுமெழில்
தாரகையோ இவ்வஞ்சியர்கள்

2 கொஞ்சுமிள விஞ்சு மிதழ்
கோவையென மை சிவந்து
கொண்டை பல வண்ணமதில்
கோதிழையார் வலம் வருவர்.

3.
பஞ்சவர்ணக் கிளிகளுமே
பார்த்து உடல் நாணிநிற்க
துஞ்சு விறல் சோவியத்து
துடியிடையார் கண்ணசைப்பர்.

4
துள்ளு நடை போட்டுவரும்
தூரவழி செல்கையி லோர்
துன்பமுடன் ஆடவரும்
துரித வழி தொடர்ந்திடுவார்

5.
வண்டியிலோர் வயிற்றுதித்து
வாழுமெனில் செல்வமதை
திண்டியற்றுப் போட்டதாலும்
திரவியமாய் நாய் சுமப்பார்.

**அபிநய சரஸ்வதிகள்**
நாங்கள் ஆசியநாட்டவர்கள். கருத்தைப் பிறருக்கு எடுத்துக் கூறும்போதோ வினாவொன்றுக்கு விடை பகரும்போதோ எம்மில்அதிகமானவர்கள் கெடுபிடி ஆர்ப்பாட்டத்துடன் அபிநயம் பிடித்துஒப்புவிப்பதில்லை. உணர்ச்சிவசப்பட்ட சம்பவங்கள் இதற்கு விதிவிலக்கு.ஆங்கிலேயர்கள் கூட அவ்வாறே உதடுகள் மட்டும்அசைய அமைதியாகப் பதிலளிப்பார்கள். ஆனால் ரூஸ்ய மக்களில் பெரும்பாலானவர்கள் சிறிய விவகாரமானாலும் அதனை ஓர்அமர்க்களமாக்கி ஏகப்பட்ட அலங்காரஅபிநயவேடிக்கைகளுடன் ஒப்பிவிப்பார்கள்.
இதனைப் பார்க்கும்போது எமக்கு வேடிக்கையாக இருக்கும்.
உதாரணமாக எனக்குத் தெரியாது என்ற கருத்தைவெளிப்படுத்தும்போது இவர்கள் புயங்கள் இரண்டையும் மேலுயர்த்தி கண்களை அகலவிரித்து, வாய்உதடுகளைப்பிதுக்கி,உள்ளங்கைகள் இரண்டையும் திறந்து கைகளை விசாலமாகவிரித்தே ஆக்ரோசமுடன் தெரிவிப்பார்கள்.
இந்தக்காட்சியைக் காணும்போது ஒரு இயற்கைநிகழ்ச்சி ஞாபகத்திற்கு வரும்.ஓர் நாயும் பூனையும் எதிரும்,புதிருமாக சந்திக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். பரமஎதிரிகளான இவைகள்,ஒன்றை மற்றொன்று தாக்க முஸ்தீபுகள் மேற்கொள்ளும். நாய் வள் வள் என்று மடைத்தனமாககுரைக்கும். பூனையோ சர்வசாதாரணமாக எழுந்து வாலை மெதுவாக அசைத்து,உடல் முழுவதையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாத்தளை: எம்.அருள்பிரகாஸ்; தவ.சஜிதரன் திருகோணமலை:மதுமாரி ,செ.கனகரத்தினம் கண்டி: எஸ் .மயில்வேந்த ன்; அட்டன்:பாலா சங்குப்பிள்ளை;குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; சுவிற்சலாந்த்:எஸ்கதிர்காமநாதன்: 41.12724336; இரா. கலாதரன்;அமெரிக்கா: செ.பாஸ்கரன்; அவுஸ்திரேலியா:பத்மா ஞானப்பிரகாசம்தென்கொரியா:ஏ.யு.எல்.ஏ.ஹில்மி

சிலிர்த்து,முதுகை வளைத்து
ஒட்டகம் போல மேலுயர்த்தி
கண்களால் சினந்து போருக்குத் தயாராகும்.
இந்தப் பூனையின் செயல் போன்றே அமைந்திருக்கும் ரூஸ்யர்களினது எனக்குத்தெரியாது என்று கூற உபயோகப்படுத்தும் நிஸ்நாயுவும்!
இதனை இலக்கியப் பாடலாகக் காண்போமா?

உற்று வழி நோக்கி உறுமி எழுந்
தசைத்து
ஒட்டகம் போல் உடலை ஒருங்கு
வித்து திட்டமுடன்
தீராப்பழியதனைத் தீர்த்துவிட
நாய்முன்னே
வீரப் பூனை என நின்ற நிஸ்நாயு.

**பழக்கடை வியாபாரம்**

பாதை ஓரங்களில் பழவர்க்கங்கள் விற்பனையாகும்.ஆண்களும் பெண்களும் வியாபாரத்தில்,ஈடுபட்டிருப்பார்கள். அடிக்கொருதடவை தமது முகமையலங்காரத்தையும் சரிபார்த்துக் கொள்ளும் வனிதையர் கள்தூசு படிந்து போய் இருக்கும் பண்டங்களிலும்,பழவர்க்கங்களிலும் அசுத்தமகற்றும் அழகே அழகு. உள்ளங்கைகளை விரித்து அவற்றில் எச்சிலை உமிழ்ந்தெடுத்து பின்பு இரு கைகளாலும் உராசித் தேய்த்து ஈரப்பதனாக்கி வைத்திருக்கும் அப்பிள்களையும்,பியேர்ஸ் ஆகியவற்றையும் பூசிஅழுக்ககற்றுவர். இதனைப்பார்த்து எவரும் அருவருப்போ அதிருப்தியோ கூட அடைவதில்லை.
இதனைப்பார்க்கும் எமக்குத்தான் விசித்திரமடைந்து கவிதை
<u>பிறக்கும் இப்படி:</u>

எச்சில் உமிழ்ந்தெடுத்து
இருகையால் பதம் கூட்டி
வைத்திருக்கும் பண்டத்
தழுக்ககற்றி–இட்டமுடன்
பார்ப்பவர்கள் வாங்கிப்
புசித்து மகிழ்ந்திடவே
பாதைவழிப் பழக்கடையர் பாங்கு.

---

**விளம்பரம்:திருமணசேவை**

வாசகர்கள் பலரது வேண்டுகோளுக்கிணங்க திருமணசேவை விளம்பரம் ஆரம்பிக்கப்படவுள்ளது.
பால்,பிறந்ததிகதி,படிப்பு,தொழில்,உயரம்,நாடு,சமயம்,வதிவிட அனுமதி,பிரசாஉரிமை,தொலைபேசி–.:.பக்ஸ்எண் தருக(பெயர்,முகவரி தருக!அவை தனியாகபேணப்படும்)முன்கட்டணம் 20குரோணர்,வெளிநாடு15அமடாலர் விளம்பர எண் குறிக்கப்படும்.

சிறுகதை:**வாழ்வு வாழ்வதற்கே!**

**தி.திலீபன்**

கானம் பாடும் கடலலைகள் தாலாட்டும் ஓர் அழகிய கிராமம். அமைதியும் ஆனந்தமுமே அங்கே குடி கொண்டிருந்தது.. மலையும் மலை சார்ந்த இடங்களுமான முருகக் கடவுளின் நிலம் நேர்வே நாட்டின் சொந்தமோ? இந்தக் கோடை நாட்களில் இயற்கை மகளை சூடாக்கி அவளைக் காதலிக்கும் சூரியன்துயில் கொள்ளமறுக்கிறான். குழந்தைப்பிள்ளையைப் போல் அடம்பிடிக்கிறான். இக்கிராமத்தின் பத்து வயதுப் பாலகன் எரிக்! முத்துப்பற்கள் சிந்தும் சிரிப்புகள் என்றும் அவன் முகத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும். மெலிந்த உருவம் நிறைந்த அறிவு. எல்லோரையும் வசீகரிக்கும்,தன்மை அவனுக்கு மட்டுமே சொந்தமாக இருந்தது.
எரிக்கினுடைய நண்பர்களும் உறவினர்களும் அவனுடைய வீட்டில் கூடி இருக்கிறார்கள். இன்று அவனுக்கு பிறந்த நாள்.இதற்கான ஆய்த்தங்களை தாயும் உறவினர்களும் ஓடியாடிச் செய்து கொண்டிருக்கின்றனர். கேக்கின் மேல் பத்து மெழுகு திரி கொழுத்தப்பட்டு இருக்கிறது.
எல்லோரையும் உள்ளே வருமாறு அழைக்கிறாள் எரிக்கின் தாய். ஓடி திரியவேண்டிய சின்னச்சிட்டுக்களான சிறுவர்கள் வந்து தமது இடங்களில் அமர்கிறார்கள்.
எரிக் அலங்காரம் செய்து கொண்டிருக்கிறான். கறுத்த நீளக் காற்சட்டையும் வெள்ளைச் சேட்டில் கறுப்பு வண்ணாத்திப் பட்டியும் அவனுக்கு மேலும் அழகு சேர்த்தன. சிரித்த முகத்துடன் எல்லோரையும் வணங்கி ஹாய்! என்று சொன்னபடி முன் வந்து கேக்கின் முன்னால் நிற்கிறான்.
உறவினர்களும் நண்பர்களும் எழுந்து நின்று பிறந்த நாள் பாட்டைப் பாடுகிறார்கள். பாடல் முடிந்ததும் எரிக் கேக்கின் மேல் உள்ள மெழுகுதிரிகளை ஊதி அணைக்கிறான்.எல்லோரும் கைதட்டினார்கள். ஆனால் அவர்களின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. இவர்கள் எரிக்கை வெறுக்கிறார்களா? அப்படியானால் ஏன்அவனுடைய பிறந்தநாளுக்கு வந்தார்கள். அப்படி அன்பு இல்லையெனில் ஏன் எரிக்கை போய் கொஞ்சுகிறார்கள். அவனுடைய தாய் தந்தையரும் சிரிக்கின்றனர்.
அந்தச் சிரிப்புகளில் உயிரில்லை. ஒருவரை ஒருவர் காதுக்குள் கதைத்துக் கொள்கிறார்கள். தலை யாட்டிக்கொள்கிறார்கள். சிரிக்கிறார்கள். ஆனால் முகத்தில் சோகம் முத்திரை குத்திக் கொள்கிறது.
மாறாத சிரிப்பு எரிக் முகத்தில் எப்பவும் இருந்தது.
எல்லோருக்கும் பலகாரமும் பண்டங்களும்,கேக்கும்,பரிமாறப்படுகிறது.. எல்லோரும்உண்டு முடிக்கையிலே கையைத்தட்டிக் கொண்டு எரிக் எழும்புகிறான். என்ன நிதானம் ? என்ன ஆளுமை? எமக்கு இப்ப கூடநாலு பேருக்கு முன் பேசுவது என்றால் குலைப்பன் எடுக்கும். எரிக்கின் செவ்விதழ்களினூடு சிறந்த நோர்வே மொழி மலர்கிறது.
என் இனிய நண்பர்களே! உறவினர்களே அனைவருக்கும் வணக்கம். இது தான் எனது கடைசிப்பிறந்தநாள். என்பது எனக்கு நன்கு தெரியும். ஆனால் நானோ மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? நாளை நிகழவிருக்கும் சாவுக்காகவோ சோக நிகழ்வுக்காகவோ இன்று கவலைப்படுவது முட்டாள்தனம். அதனால் இன்று நிகழும் இன்பகரமான நேரங்களைக் கூட நாம் இழந்து விடுகிறோம். சாவு என்பது இயற்:கையிலேயே எல்லோருக்கும் வரும் ஓர் நிகழ்வுதான். யாருக்கும் சாகும்காலம் தெரியாது. ஆனால் அது எனக்கு தெரியும். இந்தமாதம் நான்,இறந்துவிடுவேன். நீங்கள் மக்கள் எல்லோரும் இப்படிக் கவலைப்படுவீர்கள் என்பதால்தான் உங்கள் சாகும் நாளை உங்களுக்கு இறைவன் அறியத் தரவில்லை. அதை நினைத்து நினைத்தே உங்கள் ஒவ்வொருநாளையும் நரகமாக்கிக் கொண்டுஇருந்திருப்பீர்கள். நான் வாழ்ந்தஇந்தப் பத்துவருடங்களும் சந்தோசமாகத்தான் வாழ்ந்தேன்! அது எனக்குப் போதும்!
பத்தாயிரம் வருடங்கள் சாவை எண்ணிக் கலங்கிக் கவலையுடன் வாழ்வதைவிட பத்து வருடங்கள் மேலானவையே. எல்லோரும் சந்தோசமாக இருங்கள்!கலகலப்பா

www.tamilarangam.net

பொற்ஸ்வானா:கமலா.வேலுப்பிள்ளை புருணை: வி.எஸ்.சிவகுமார் யப்பான்:டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா சிங்கப்பூர்:மு.பத்மா மலேசியா:க.மாணிக்கவாசகர்,க.கணேசன் ,அருண் பேராசிரியர்.இர.ந.வீரப்பன் இந்தோனேசியா: மெடான்:நாகலிங்கம்; மு.சந்திர சேகரன்; .யகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு;நா.சங்கரன் பர்மா:அப்துல் ரசாக்

க இருங்கள்! நான் இறந்தாலும் உங்கள் இதயங்களில் நீங்கள் இறக்கும் வரை வாழ்ந்து கொண்டிருப்பேன். எனது சாவீட்டில் கூட ஒருவரும் அழக் டாது. எல்லாரும் சந்தோசமாக இருக்கவேண்டும் என்பதற்காகவே நான் சந்தோசமாக இருந்தேன் என்று கூறி முடிக்கையிலேயும் எல்லார் முகங்களிலும் கண்ணீர் கரை புரண்டு கொண்டிருந்தது. சிரிக்கமுயன்றார்கள். சிரிப்பு சாகப் போகும் மானிடத்தைப் பார்த்து சிரித்துவிடுகிறது.

எல்லோரையும் சிரிக்க வைப்பதற்காக எரிக் ஆடுகிறான் பாடுகிறான் பகிடிவிடுகிறான். ஆனால் அச்சிரிப்புகள்தோன்றி மறைந்து விடுகின்றன. எல்லோருடைய கவனங்களையும் தன்பக்கம் திருப்பிய எரிக் நான் ஒரு சின்னக் கதை சொல்கிறேன் கேட்பீர்களா? ஆம் ......ஆம் என்றுபதிலளித்தனர். ஓர் பன்றியைப் பார்த்து மனிதன் சொன்னானாம் நாளை உன்னைக் கொன்று தின்னப் போகிறேன் பாவம் பன்றி என்ன செய்வாய்? என்றானாம். பன்றி சொல்லியதாம் மலம் தின்னும் என்னையே மனிதனான நீ தின்கிறாய். ஆனால் மனிதனான உன்னை,யாருமே தின்னமாட்டார்கள் என்றது, என்றான் எரிக். எல்லோரும் சிரித்தார்கள். எரிக்கும் சிரித்தான். சிறிது மயக்கம் வருவது போல் அவனுக்கு இருந்தது. மெல்லக் கதிரையில்சாய்ந்தான். தாய் தாங்கிக் கொள்கிறாள்.அவனது மூச்சு நின்று விடுகிறது. தாய் சிரிக்கமுயல்கிறாள். அவனால்முடியுமா......மீண்டும் முயல்கிறாள். முடியவில்லை. எல்லோரும் சிரிக்காவிட்டாலும் எரிக்கின் விருப்பப்படி அழாமல் இருக்க முயற்சிக்கின்றனர். வாயைக் கூட பொத்திக் கொள்கின்றனர். ஆனால் கண்ணீர் அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடுகிறது. இறந்த எரிக்கின் முகத்தில் சிரிப்பு மாறாமல் இருந்து கொண்டே இருக்கிறது.

வைத்தியசாலையில் இரத்தம் ஏற்றும் போது கீவ்(HiV) எயிட்ஸ்(AIDS)கிருமிகளையும் சேர்த்து டாக்டர்கள் ஏற்றிவிட்டார்கள். எரிக்கின் உடலில் இறக்கும் நாள் குறிக்கப்பட்டாலும் கூட எரிக் யார் மேலும் ஆத்திரப்பட்டதில்லை.அன்பாகவே நடந்தான். எரிக்கின் வியாதி காரணமாக பிரிந்திருந்த தாய் தந்தையர் இணைந்து வாழ்ந்தனர்.

எரிக் மற்றவர்களுக்கு கொடுத்தானோ இல்லையோ எவன் வாழ்வதையும் மகிழ்வதையும் தடுக்கவில்லை. இவன் மேல் மற்றவர்கள் அன்பு செய்தார்களோ இல்லையோ அவன் எல்லோரிலும் அன்பாக இருந்தான். தன் வாழ்வை குறுக்கிய டாக்டர்கள் வைத்தியசாலைகளைக் கூட மன்னித்தான். அவன் கடைசியாக கூறிய பன்றிக்கதை இன்னும் கேட்டுக் கொண்டே இருக்கிறது. மலத்தை உண்ணும் மிருகம் கூட மனிதனுக்கு உணவாகி உதிரமாகி வாழ்ந்துவிடுகிறது மனிதராகப் பிறந்தும் மனிதருக்கு மட்டுமல்ல இந்த உலகுக்கே பிரயோசனமில்லாமல் இறந்து விடுகிறோம். சாவை எண்ணிச் செத்துக் கொண்டிருக்கிறோம். சாவிலும் வாழ்வு கண்ட எரிக் இன்று தெய்வமாய் நிற்கிறான். (நோர்வேசிறுவனின்உண்மைகதை!

## ஆங்.நூல்விமர்சனம்:எம்.ஜி.ஆர் படங்களும்,பிறகட்டுரைகளும்

**ஆக்கம்:சச்சி சிறிகாந்தா,யப்பான்**

புரட்சித்தலைவர்,முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்.பற்றி வியந்து 7கட்டுரை,தமிழர்பற்றி4கட்டுரை,மொழி பற்றி 4கட்டுரை,குதூகலம்பற்றி 5கட்டுரை,என 115பக்கங்களில் 1995ல் ஆசிய,அமெரிக்க,ஐரோப்பிய,பத்திரிகைகளில் வந்த கட்டுரைகளின் தொகுப்பு,கொழும்பில்,வெளியானது. சச்சி சிறிகாந்தா,1953ல் யாழ்.பருத்திதுறையில் பிறந்து,கொழும்பு,இலினோய்ஸ்,ரோக்கியோ,பல்கலைகழகங்களில்,பயின்று(2 பி.ஏச்டி)பேராதனை பென்சில்வேனியா,ஓசாகாவில்,உயிரசாயன ஆய்வாளராக,கல்வியாளராக பணிபுரிந்தவர்.யப்பானியபெண்ணை மணந்து 2பெண்மழலைகட்கு தந்தையாகி யப்பானில் வாழ்கிறார். இளமைக்கால எம்.ஜி.ஆர் படஅனுபவங்கள் தொட்டு அமெரிக்கபல்கலைகழகஅனுபவங்கள்,வரை,சுவையாக ஆங்கிலத்தில்கூறப்பட்டுளது. ஆய்வாளரின்மறுபக்கம் சுவையான சமூகஅரசியல்துடிப்பை,ஈடுபாட்டை காட்டுவது பாராட்டக்கூடியது. எம்.ஜி.ஆர்.சுயநலமற்ற,நேர்மையான இரக்கமான அரசியல்வாதியாயும்,வீரம்,துணிவு,தலைமை,போர்க்குணம் உள்ளநடிகராயும் விளக்கும் நூல்!

## தனித்தமிழ்காக்கும் தமிழமல்லனின், கருத்தானபேட்டி

புதுச்சேரி இந்திய நடுவணரசின் நேராட்சிப் பகுதியாகும். இங்கு 93.3வீதமாகவுள்ள பெரும்பான்மை மக்களின் மொழியான தமிழ் நடைமுறையில் ஆட்சி மொழியாக இல்லை. இதனை எதிர்த்து பல்லாண்டு காலமாகப் போராடி வருகிறது, தனித்தமிழ் இயக்கம். தனித் தமிழ் இயக்கத்தின் நிறுவன தலைவர்,வெல்லும் தூயதமிழ் திங்களிதழின் சிறப்பாசிரியரும், அரசுப்பள்ளியின் ஆசிரியருமான திரு.க.தமிழமல்லன் அவர்களுடன் ஓர் நேர்காணல்.

***கேள்வி: தனித்தமிழ் இயக்கம் பற்றிக் கூறுங்கள்.?***

பதில்: தூயதமிழை அனைவரும் படித்து அதற்கேற்பச்செயல்படுமாறு அறிவுறுத்தலே எம் பணியாகும். நாம் தோற்றுவித்து நடத்திக் காட்டிய தமிழ்க்கழகம் தனித்தமிழ்க்கழகம் ஆகிய இயக்கங்களின் வளர்ச்சியே தனித்தமிழ் இயக்கம்.

***கேள்வி: தங்கள் இயக்கம் செய்த சாதனைகள் குறித்து?***

பதில்: புதுச்சேரி வாசகசாலைகளில் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாவினை சிதைத்தும் கெடுத்தும் பாடி வந்தனர்.அப்பொழுது அதனை எதிர்த்தோம். சட்டமன்ற உறுப்பினர்களை சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பச் செய்தோம். அதன் பின்னர் அரசு அப்பாடலை முழுமையாக பாடுமாறு உத்தர விட்டு சுற்றறிக்கை விடுத்தது. தமிழில் பெயர்ப்பலகைகளை அமைக்குமாறு கோரி கடைகள் தோறும் சென்று அறிவுறுத்தி வருகின்றோம். புதுச்சேரியில் ஐந்து இடங்களில் தூயதமிழில் பெயரிட பல்வேறு தமிழ்ப்பெயர்கள் கொண்ட பலகைகளை அமைத்துள்ளோம். கழகத்தமிழ் இலக்கிய சொற்பொழிவுகளை 12 ஆண்டுகளாக நடத்தி வருகின்றோம். புதுச்சேரி வில்லியனூர்ச் சாலைக்கு மறைமலை அடிகள் பெயரைச் சூட்டச் செய்துள்ளோம். தனித்தமிழ் காக்கப்பெற்றால் தான் தமிழ் காக்கப் பெறும். தனித்தமிழ் என்றால் அது தமிழறிஞர்களுக்கு மட்டுமே என்று சிலர் கூறுகின்றனர். அதனை மாற்றி அனைவர்க்

www.tamilarangam.net

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
தமிழார்வலர்,எழுத்தாளர்,கல்லூரி,பொதுநூலகமுகவரிகள் தந்துதவுக! தகவல்சேவையில் உங்கள் நாட்டு விபரங்கள் பகிர்க!

கும் தனித்தமிழ், பலதுறை தனித்தமிழ் வளர்ச்சி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றோம். அதன் தொடர்ச்சியாக சிறுகதை பாடல் சிறுவர் இலக்கியம் நாடகம் ஆராய்ச்சி முதலிய துறைகளில் பல நூல்களை தனித்தமிழில் வெளியிட்டுள்ளோம். நான் தொகுத்த–விருந்து,தனித்தமிழ்படைப்பாய்வு–போன்ற நூல்கள் கல்லூரி பாட நூல்களாகி இருக்கின்றன.

*1983* இல் இலங்கைத் தமிழர் படுகொலையை கண்டித்து எம் சார்பாக மகளிர் உண்ணாநோன்பு இருந்தனர்.இதில் என் மனைவியும் கலந்துகொண்டார்.1984ல் தனித்தமிழ் இலக்கிய மாநாடு நடத்தியுள்ளோம். புதுச்சேரி வானொலி நடத்திய இந்திப் பாடத்தில் தமிழ் இனிமையானது இல்லை எனக் கூறப்பட்டபொழுது அதனை வன்மையாக கண்டித்தோம். புலவர் கீரன் அவர்கள் தமிழ் வழிபாட்டு மொழி ஆகமுடியாது,என்று கூறியபொழுது அதனை,எதிர்த்துபோராடினோம். இன்றும் தமிழுக்கு எதிரான நடவடிக்கைகள் எதுவானாலும் அதனைச்செய்பவர்,யாரானாலும் அதனை முறையாக தவறாமல் எதிர்த்து வருகிறோம்.

***கேள்வி. வெல்லும் தூய தமிழ் இதழ் பற்றி?***

பதில். தூயதமிழை வழக்கில் கொண்டு வருவதற்காக வெளியிடுகின்றோம். இதழுக்குரிய கட்டணம் மட்டுமே பெற்று நன்கொடைகள் மறுத்து தனித்தமிழ் இதழ்கள்தொடர்ந்து வரா!என்னும் தடையினை உடைத்து வெளியிட்டு வருகின்றோம். காலப்போக்கில் தினசரியாக மாற்றவும் எண்ணம் கொண்டுள்ளோம்.

***கேள்வி. உலகத்தமிழர்களுக்கு தாங்கள் கூற விரும்புவது என்ன?***

பதில். தமிழினத்திற்குரிய அனைத்து இடர்பாடுகளும் நீங்குவதற்கு தனித் தமிழ் சிறந்தகருவி. தனித்தமிழை முறையாககாத்து வளர்த்தால் தமிழுக்கான இடர்ப்பாடுகள் நீங்கும். என்பதில் ஐயமில்லை. ஒரு காலத்தில் வடமொழி மேலாண்மை செலுத்திற்று. அனைத்து துறைகளிலும் தமிழை நசுக்கி வந்தது. தனித்தமிழைக் காக்க மறைமலை அடிகள் தேவநேயப் பாவாணர் போன்றோர் இருந்ததால் வடமொழி ஒதுக்கப்பட்டது. தற்பொழுது ஆங்கிலம் நம்மிடையே வளர்ந்து வருகின்றது. வடமொழிகளில் இருந்தே மீளாத நாம் தற்பொழுது ஆங்கிலத்தில சிக்கி இருக்கின்றோம்.அதனால் பல மறைமலை அடிகளும் பல தேவநேயப்பாவாணர்களும் தோன்றவேண்டும். தனித்தமிழை வளர்க்க வேண்டும் என்றும் தமிழ்மொழி, தமிழ்இனம் தமிழ்நாடு இவற்றுக்காக பாடுபடுவோம் என்றும் கூறிக்கொள்கிறேன். நன்றி!வணக்கம்!

சர்வதேச தமிழர் சார்பாக நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

*–புதுச்சேரி ச.வேல்முருகன்*

---

**ஒஸ்லோ திலீபனின்-கவிமலர்கள் கவிதைத்தொகுப்பு-தமிழ்நாட்டின் பிரபலபிரசுரத்தால் வெளியிடப்பட்டுள்ளது-அதற்கு கொழும்பிலிருந்து அவர் தந்தையாரின் விமர்சனம்!**

கவிமலர்கள் படித்தேன்.நான் என்றோ ஒருநாள் தனித்தன்மை பற்றி சொன்னதை நினைவுவைத்திருக்கிறாய்.உண்மையில் நான் அதை மறந்துவிட்டேன்.

மற்றவர்கள் இதுவரை சொல்லாத, செய்யாத நல்லவிடயங்களை சொல்வதும்,செய்வதும் தனித்தன்மை தான்!என்றாலும் மற்றவர்கள் இதுவரை சொன்னகருத்துகளை திரும்பவும்,திரும்பவும் சொல்லக்கூடாது என அர்த்தமாகாது.மற்றவர் கருத்தை,நீ சொன்னதாக பாவனை செய்வதுதான் கூடாது.

யார் எப்போதுசொன்னாலும் நல்லகருத்துகளை ஏற்றுக்கொள்ளலாம். அதனை நீ, உன் அனுபவம்,கற்பனைகொண்டு உன்மொழியில் அழகாகச்சொன்னால் அதுவும் தனித்தன்மை தான்.

நான்சிறுவனாக இருந்தபோது,பரமசிவன் கழுத்துப்பாம்பு,கருடனிடம் சுகம்கேட்ட புராணகதையைக்கேட்டிருக்கிறேன்.ஆனால் அதையே கண்ணதாசன் சொன்னவிதமும் வார்த்தைகளும்,இசைநயமும் புதியவை.பழையகதை எனினும் புதிய தனித்தன்மை பெறுகிறது. கவிதைவெற்றிக்கு இசையும்முக்கியம்!கண்ணதாசன்,வெற்றிக்கு,அவர் இசையோடு இயைந்தகவிதைகள் முக்கியகாரணமாகும். முடிந்தால் நீயும் முயன்றுபார்க்கலாம்.

ஒற்றுமையீனம்,ஏமாற்றுவித்தை,அனாவசியஆடம்பரம்,வன்செயல்,சீதனக்கொடுமைஎனதமிழரிடையேயுள்ள தீயகுணங்களை கூறியிருப்பது,வரவேற்கத்தக்கது.சிகரட்சிரிப்பு புகைப்பதற்கு எதிரான விளம்பரத்துக்கு பொருத்தமானதாக இருக்குமென எண்ணுகிறேன்.மென்மை,கிளாலி,எம் இன்றையநிலையை உணர்த்துகின்றன.கைமிழந்ததமிழர்–படிக்கும்போது, நாங்கள் எல்லோரும் தென்மராட்சி புலம்பெயர்ந்தது நினைவுக்கு வந்தது.இப்படி ஒருநிலை எமக்கு வருமென,கனவுகூடகாணவில்லை. துருவத்து கவிக்குயில்,தொலைத்துவிட்டேன்,குரல்இழந்தகுயில் ஆகியவை சுயபரிதாபமா?பிறந்தநாட்டைநினைத்து ஏக்கமா? அங்குமில்லை!இங்குமில்லை என்ற பரிதாபமா?

ஒருகொள்கையை மையமாகவைத்து எழுதுவதோ,கவிபுனைவதோ வேறு!உதாரணமாக பொதுஉடமைதத்துவத்தை மையமாகவைத்து எழுதியவர் பலர்!அவர்களின் எழுத்துச்சுதந்திரம் அந்தக்கொள்கையினுள் அடக்கம்!தான் பார்க்கும் எந்தநிகழ்வையும்,கற்பனைவளம் பொங்க உணர்ச்சியுடன் அதைவார்த்தைகளில் சொல்ல எவனால் முடிகிறதோ?அவன்தான் உண்மையான கவிஞன்!அவன், தான் அனுபவித்ததை தன்னுடைய கவிதைகளைப்படிப்பவர்களையும் அனுபவிக்கவைப்பான்!

**சு.திருச்செல்வம்-கொழும்பு**

**அமரமறுத்து........!**

என் எழுதுகோல் எழுதியது–ஆனால்
தமிழ்எழுத்துகள் வெள்ளைத்தாளில்
அமரமறுத்தது–காரணம்
அமரத்துவமான கருப்புத்தாளாய்
அதன் விழிக்குத் தெரிந்தது
உலகத்தின் முதன்மொழியாம்
தென்மொழியாம்
அமுதமொழியாம்
தே மதுரமொழியாம்
உயிருள்ள எழுத்துக்களும்
மெய்யான எழுத்துக்களும்
உயிரும்மெய்யும் கலந்த
உயிர்மெய் எழுத்துக்களும்
கொண்டதெல்லவோ எந்தன்தமிழ்மொழி
ஈழத்தமிழர் படுகொலைகண்டு
உயிரெழுத்து உயிரற்ற எழுத்தானதோ?
மெய்யெழுத்து பொய்எழுத்தானதோ?
உயிர்மெய்எழுத்து உயிரற்றபொய்யானதோ
அதனால்தான் தமிழெழுத்து
வெள்ளைத்தாளில் அமரமறுத்ததோ?


**எழுச்சிக்கவிஞர் சொல்லரசு-சேலம்**



சர்வதேசதமிழரில்,வரும் கதைகளின் சம்பவங்கள்,பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர்கடிதங்கள் மிகமிக வரவேற்கப்படும்!
ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக!தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்!
ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நன்றி: தினமணி

**ஆ.கணேசன்**

பெங்களூர், ஜன. 8—

ஒருவேளை உணவுக்காக, இலங்கை அகதிகளின் 230 பள்ளிக் குழந்தைகள் பெங்களூர் முகாமில் தவித்துக் கொண்டிருக்கின்றன. இவர்களுக்குக் கிடைத்துவந்த அரசின் உதவித்

தொலைவிலுள்ள ஜாக்கூரில் ஒரு பள்ளிக்கூடம் அமைந்தது. 'மெஸ்கா' என்ற அமைப்புக்குச் சொந்தமான கட்டடத்தில் 1990-ம் ஆண்டு இப் பள்ளி துவக்கப்பட்டது.

தமிழ் நாட்டிலுள்ள அகதி முகாமில் தங்கியுள்ளவர்களின் 230 குழந்தைகளுக்கு இங்கு

கள் சந்தித்து, குழந்தைகள் பட்டினி கிடப்பதை எடுத்துக் கூறினர். அவர்களுக்கு நம்பிக்கை வாக்குறுதி கொடுத்து அனுப்பிய கௌட அதன் பிறகு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பள்ளி நிர்வாகிகள், எலகங்காவிலுள்ள கடைக்காரர்களிடம் கடன் வாங்கி, குழந்தைகளின் ஒருவேளைப் பசியை மட்

டுப் போக்கி வருகின்றனர் பிரைட் சொசைடி தரும் பணத்தைக் கடனுக்கு அடைத்து, ஒருவாறு சமா ளித்து வருகின்றனர்.

### எலும்பும் தோலுமாய்...

இந்த முகாமுக்குச் சென்ற போது, எலும்பும் தோலுமாய் ஆண், பெண் குழந்தைகள் பள்

**தமிழ்நாட்டின் அகதி முகாமிலிருந்தபோது, இந்தக் குழந்தைகளுக்குத் தமிழ்நாடு அரசு படி கொடுத்து வந்தது. இவர்கள் பெங்களூர் வந்த பிறகு அதை நிறுத்திவிட்டது.**

தொகை நிறுத்தப்பட்டதே இதற்குக் காரணம்.

இலங்கையில் கடந்த 10 ஆண்டுகளாக நடந்து வரும் போரினால், உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தமிழ்நாட்டுக்கு வந்த இலங்கைத் தமிழர்கள், 60 அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இவர்களின் குழந்தைகளுக்குக் கல்வி அறிவு கொடுக்க இலங்கைத் தமிழரான ராஜரத்தினம் முன்வந்தார். 'பிரைட் சொசைட்டி' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அகதி முகாம்களில் குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிப்பது இதன் நோக்கம்.

இவ்விதம், பெங்களூரிலிருந்து 50 கிலோ மீட்டர்

முதல் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை கல்வியளிக்கப்படுகிறது. 9 ஆசிரியர்கள் உள்ளனர்.

### நன்கொடை மூலம்...

நன்கொடையாளர்களிடம் பணம் வசூலித்து பிரைட் சொசைட்டி இதை நிர்வகித்து வருகிறது. ஆனால், அது நிரந்தரமாகக் கிடைப்பதில்லை. குழந்தைகள் பராமரிப்பு, கல்விச் செலவுகளுக்கு மாதம் ரூ. 45 ஆயிரம் வரை தேவைப்படுகிறது. கிடைக்கும் நன்கொடையைப் பொறுத்தே பணம் கிட்டுவதால், சில நாட்களில் இந்தக் குழந்தைகள் பட்டினி கிடக்க நேரிடுகிறது. 1994-ம் ஆண்டு நிலைமை மிகவும் மோசமடைந்தது.

இதைக் கண்ட ஒரு சமூக சேவகர் கர்நாடக நீதிமன்றத்தில் மனித உரிமையடிப்படையில் வழக்கு தொடர்ந்தார்.

### கர்நாடக உதவி நிறுத்தம்

அந்தக் குழந்தைகளின் பராமரிப்பு, படிப்புச் செலவுகளை ஏற்பதாக நீதிமன்றத்தில் கர்நாடகம் தெரிவிக்கவே, வழக்கு [illegible] அன்றிலி

ருந்து அரசு மாதம் ரூ. 41 ஆயிரம் வீதம் கொடுத்து வந்தது. இதுவும் தொடர்ந்து நீடிக்கவில்லை. 1995-ல் நிறுத்தப்பட்டது. அகதிகளுக்குச் செலவாகும் தொகையை மத்திய அரசு தாவில்லை எனக் காரணம் கூறப்பட்டது.

இதையடுத்து, அப்போது முதல்வராக இருந்த தேவெ கௌடவைப் பள்ளி நிர்வாகி

ளியில் பரீட்சை எழுதிக் கொண்டிருந்தனர். பல நாட்களாக எண்ணெயே தேய்க்கப்படாத தலை. கிழிந்த ஆடைகளுடன் காணப்பட்டனர்.

தலைமை ஆசிரியர் விஜயராஜைக் கேட்டபோது அவர் கூறியதாவது: தேவெ கௌட

கொடுத்து வந்தாலாவது பட்டினி இல்லாமல் குழந்தைகளை வளர்க்க முடியும்.

### தினமும் கேப்பைக் கூழ்

தினமும் கேப்பைக் கூழ் சாப்பாடுதான் கொடுக்க முடிகிறது. கடந்த சில மாதங்களாக அதற்குக்கூட வ

**இரு மாநில அரசுகளின் உதவியும் மத்திய அரசு உதவியும் கிடைக்காமல் இந்தக் குழந்தைகள் அவதிப்படுவதைப் பார்த்து இரக்க குணமுடையோர் உதவிக்கு வரமாட்டார்களா என ஏங்கி நிற்கிறோம்.**

வைச் சந்தித்து மனு கொடுத்த பிறகு, தலைமைச் செயலரைப் பார்க்கச் சொன்னார்கள். அவர் சமூக நலத்துறைச் செயலரைப் பார்க்கச் சொன்னார். அங்கு விசாரித்தபோது, உள்துறைக்குக் கோப்பை அனுப்பிவிட்டதாகச் சொன்னார்கள்.

பின்னர் பெண்கள், குழந்தைகள் நல இலாகாவில் எங்கள் மனு இருப்பதாகக் கூறினர். அங்கிருந்து கடந்த 9-ம் தேதி ஓர் அதிகாரி வந்து பள்ளியைப் பார்த்துவிட்டுச் சென்றார். இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை.

இந்தக் குழந்தைகள் தமிழ்நாட்டின் அகதி முகாமிலிருந்தபோது, தமிழ்நாடு அரசு படி கொடுத்து வந்தது. இவர்கள் பெங்களூர் வந்த பிறகு அதை நிறுத்திவிட்டது. அதைக்

யில்லை. கடனைக் கேட்டு வரும் கடைக்கரர்கள்கூட குழந்தைகள் பட்டினியா வாடுவதைப் பார்த்துப் பேசமல் சென்று விடுகின்றனர்.

இரு மாநில அரசுகள் உதவியும் மத்திய அரசு உதவியு கிடைக்காமல் குழந்தைக அவதிப்படுவதைப் பார்த் இரக்க குணமுடையோர் உ விக்கு வரமாட்டார்களா என ஏங்கி நிற்கிறோம்.

எல்லாக் குழந்தைகளுக்கு புத்தகம் வாங்கிக் கொடுக் முடியவில்லை. ஒரு புத்தகத்தை 5 பேர் படிக்கின்றன சில வகுப்புகளில் ஆசிரியருக்கு மட்டுமே புத்தகம் உள்ளது அதை வைத்து நோட்டுப் புத்தகத்தில் எழுதிப் படிக்கின்றன என்றார் தலைமையாசிரியர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எதிர்காலத்தின் ஜனநாயகம்.....

## FREMTIDENS DEMOKRATI

"ஜனநாயகம்" என்பது ஒரு நவநாகரிகச் சொல்லாக மாறிவிட்டது. எமது சமுதாயத்தில் ஜனநாயகம் என்ற சொல் தீர்மானமெடுக்கப்படுபவர்களாலும் தொலை தொடர்புச் சாதனங்களினாலும் அடிக்கடி பாவிக்கப்படுகின்றது. ஒரு செயற்பாடு ஜனநாயகத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படும் போது எந்த நடைமுறைப்படுத்தலுக்கு எதிராக எவரும் முறையீடு செய்ய முடியாது. எடுக்கப்பட்ட முடிவுகளில் அனைவரும் திருப்த்தியடைவர் என இங்கே பொருள் விளங்கலாகாது. அப்படியிருந்தும் நாம் எமது நாட்டின் ஜனநாயக முறையைப்பற்றி பெருமைப்படுவதுடன் பாராளுமன்றத் தேர்தலில் அதிக வீத மக்கள் வாக்களிப்பதையிட்டு மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

ஜனநாயகத்திற்கும் தனது பலவீனங்கள் உண்டு. இவை பற்றி நாம் பெரிதாகவே அறியப் பெறுகின்றோம். ஜனநாயகம் மக்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்கின்றது. ஆனால் மக்கள் என்போர் உணர்ச்சிக்களுள்ள ஒரு கூட்டமான மனிதர்களே. இந்த மக்களின் உணர்ச்சிகளுடன் விளையாடுவதன் மூலம் ஒரு கருத்தின் காரண காரியங்களை விளங்கிக் கொள்ளாமலேயே கருத வைக்க முடியும். உதாரணம், மக்களின் உணர்ச்சிகளுடனும் விளையாடுவதன் மூலமும் ஜனநாயக நடைமுறையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதன் மூலமும் ஹிட்லர் ஆட்சிக்கு வந்தார். ஜனநாயகம் சரியாக நடைமுறைப்படுத்தப்படும் நாடாக இருந்தாலும் அங்கும் ஒரு அவநம்பிக்கையிருக்கும்.

பெரும்பான்மை மக்களால் எடுக்கப்படும் முடிவும் சில வேளைகளில் பிழையானதாக இருப்பதுடன் அப்பிழையானது மீண்டும் திருத்தி அமைக்க முடியாததாகவும் அமைந்து விடுகின்றது.

பாராளுமன்றத் தேர்தலின் கூடியவீதமான வாக்களிப்பினைக் கண்டு நாம் பெருமையடைந்தாலும் பெரும்பாலான வாக்களிப்போர் தெரிவு செய்யும் அரசியல்வாதிக்கு என்ன நடக்கிறது என்பது பற்றி அக்கறைப்படுவதில்லை.

எதிர்காலத்தில் ஜனநாயகத்தின் எல்லை எவ்வளவுக்கெவ்வளவு விரிவடைகின்றதோ அவ்வளவிற்கு நாம் எம்மை ஈடுபடுத்திக் கொள்ளப் போகின்றோம் என எண்ணுகின்றேன். உண் மைகளைத் திரித்துத் தமது பொய்களைத் தொலைதொடர்புச் சாதனங்களில் பரவச் செய்ய நாசிஷ்டுகளிற்கு அனுமதி வழங்க வேண்டுமா..? ஒரு குழந்தையற்ற 52 வயது நிரம்பிய பெண்ணை தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம் குழந்தை பெற அனுமதிப்பது நியாயமா...?நாம் பொதுவாகத் தீர்மானிக்கும் கட்சிகள், அமைப்புக்கள் மற்றும் சமயரீதியான இயக்கங்கள் ஜனநாயகத்தை அடியோடு ஒழிப்பதற்கு ஜனநாயக முறையைப் பயன்படுத்த அவர்களிற்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தை டனிஷ் பிரஜைகளின் பிரதிநிதியாக இருக்க வைப்பதே எமது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் வெற்றிக்கு வழியாக அமையும். இளம் அரசியல்வாதிகளின் எண்ணங்கள் சிதைவடையாமலும் அவர்களுக்கு மீள்பயிற்சி அளிக்காமலும் அவர்கள் பாராளுமன்றத்திற்குள் வருவதற்கு கட்சிகள் ஆவன செய்தல் வேண்டும். அடுத்ததாக பாராளுமன்றத்தில் குறைந்த பிரதிநிதித்துவம் உடைய குழு பெண்களாவர். இங்கே முக்காடினால் பெயர் போன துருக்கி ஒரு பெண்ணை அரசின் தலைவியாகக் கொண்டிருந்தது. பெண்சிசுக் கொலை பற்றி அதிகம் பேசப்படும் இந்தியா ஒரு உறுதியுள்ள பெண்மணியை பிரதமராகக் கொண்டிருந்தது. டென்மார்க்கில் ஒரு போதும் பிரதமமந்திரிப் பதவிக்குரிய வேட்பாளராக ஒரு பெண்மணியும் தெரிவு செய்யப்படாதது என்னை ஆச்சரியத்திலேயே ஆழ்த்துகின்றது. சமுதாயத்தின் தனிப்பட்ட குழுக்களைப் பிரதிநிதித்துவம் வகிக்காமல் மக்கள் முழுவதையும் பாராளமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடிய வகையிலேயே எதிர்கால ஜனநாயகம் கட்டி எழுப்பப்படல் வேண்டும்.

ஏற்கனவே சொன்னது போல் சாதாரண டெனிஷ் பிரஜையின் அரசியல் பங்களிப்பு குறைவானதே. புதிதாக எதையும் சொல்லாமல் நிறையப் பேசுவதே அரசியல்வாதியின் திறமை என்பதை மக்கள் கண்கூடே கண்டது தான் சில வேளை இதன் காரணமாக இருக்கலாம். இந்த முறை செல்லுபடியாத பட்சத்தில் "எந்த விமர்சனமும் வேண்டாம்." அல்லது "சந்திக்க முடியாது" அல்லது "அல்லது நான் ஒரு பரிசோதனையை ஆரம்பித்துள்ளேன்." போன்ற சொற்தொடர்கள் உபயோகிக்கப்படும்.

முடிவெடுக்கும் நடவடிக்கையைப் பொதுமக்களிடமிருந்து தேவைக்கு அதிகமான தூரத்தில் வைத்தால் ஜனநாயகம் தனது தனித்துவத்தை இழந்து விடாமல் பாதுகாத்தல் வேண்டும். பிரதேசரீதியான அரசியலில் பங்களித்தலானது அதிகளவில் இல்லாவிட்டாலும் அதில் பங்களித்தல் சாத்தியமானதாக இருத்தல் வேண்டும். முடிவெடுக்கும் நடவடிக்கை தேவைக்கு அதிகமான தூரத்தில் இருப்பதால் மக்கள் தங்களது பங்களிப்பினைக் கைவிட்டு விடுகின்றனர். இப்படியான கைவிடுதலானது சக்தி நிரம்பிய ஜனநாயகத்திற்குப் பேரிடியாக அமையும்.

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர்இலக்க நிலையம்
/யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும்.
தரமான ஆக்கங்கள்,ஓவியங்கள்,புகைப்படங்கள்,காட்டூன்கள் மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.

www.tamilarangam.net

இன்று வரை எனது கருத்துப்படி ஜனநாயக முறையே சிறந்த ஆட்சி முறையாகும். அதைவிடச் சிறந்த ஆட்சி முறையை எதிர்காலத்தில் கண்டுபிடிப்போமா என்பது தெரியாத ஒன்றாகும். ஜனநாயக முறை இருக்கும் வரை அதனைச் சிறப்படையச் செய்வதற்கு உதாரணமாக வேலைத் தளங்களில் பொருளாதார ஜனநாயகத்தை மேலும் அதிகரிக்கலாம்.

ஜனநாயகம் மேலிடத்து முடிவில் மட்டுமே தங்கியிருக்காமலிருக்க நகரசபை அலுவலகங்களில் தொழில் புரிவோர் பொதுமக்களுக்கு எழுதும் கடிதங்களில் விளங்கிக் கொள்ள வேண்டிய டெனிஷில் எழுத ஆரம்பிக்க வேண்டும். இன்றைய குழந்தைகளே நாளைய பிரஜைகள். அதனாலேயே பாடசாலைகளிலும் உயர்கல்வியிலும் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் சமுதாயத்தின் அமைப்புப் பற்றியும் எப்படியான உரிமைகளும் கடமைகளும் எமக்கிருக்கிறது என்பது பற்றியும் கற்பித்தல் வேண்டும். சமுதாய அபிவிருத்தி பற்றிய ஆர்வத்தை முடிவெடுப்பது பற்றிய நடவடிக்கையும் சமூகக் கல்வியைக் கட்டாய பாடமாக ஆக்குவதன் மூலமுமே கொண்டு வர முடியும்.

நான் போரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கும் ஒரு நாட்டிலிருந்து வந்திருக்கும் ஒரு அகதி. எவரின் கையில் துப்பாக்கி இருக்கின்றதோ அவர்களிடமே அதிகாரமும் இருக்கின்றது. அதனாலேயே ஒரு திறமையான நிர்வாக அமைப்புடைய நாடான டென்மார்க்கிற்கு வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். டெனிஷ் மக்கள் ஜனநாயகம் தானாகத் தொடரும் எனக்கருதுவதாலேயே பொதுவாக அவர்கள் அரசியல்வாதிகளைப் பற்றி அக்கறை கொள்வதில்லை என்று எண்ணுகின்றேன். தனிப்பட்ட ஒருவரால் ஆக்கிரமிக்கப்படாமல் இருக்க வேண்டுமாயின் பொதுமக்களும் அரசியலில் பங்களிப்பது அவசியமாகும்.

அரசியல் அமைப்புக்களானது பொதுமக்களின் ஆர்வத்தைக் கவரப் பிரத்தியேக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். தமது கதகதப்பான கதிரைகளில் அமர்ந்து தொலைக்காட்சியில் பரப்பப்படும் நிகழ்வுகளைப் பார்ப்பது இலகுவானது என நினைக்கின்றனர்.

கொப்பனேக்கனில் இருந்து நேரடி ஒலி-ஒளி பரப்பின் மூலம் அரசியல்வாதிகளைச் சந்திக்கும் வாய்ப்பு இருக்கும் போது எதற்காக அவர்களை நேரடியாகத் தேடிச் செல்லல் வேண்டும். இந்த முன்னேற்றத்தை நான் மனவருத்தத்துடனேயே பார்க்க வேண்டியுள்ளது. ஏனெனில் பெரிய மண்டபத்தில் கூடியிருக்கும் ஏழு மனிதர்களுக்கு முன்பாக ஒருவர் எழுந்து நின்று பேசும் சூழலையே இது உருவாக்கியுள்ளது. ஒரு நாட்டின் பிரதமமந்திரியே ஒரு சிறிய நகரத்துக்கு வந்து நடைபாதையால் செல்லும் மக்களுடன் பேசுவதைப் பிற நாடுகளில் காண்பது மிகவும் அரிதான ஒன்றாகும். இப்படியான அரிய சந்தர்ப்பத்தை மக்கள் பயன்படுத்தாதது என்னை ஆச்சரியத்திலேயே ஆழ்த்துகின்றது. எம் அனைவருக்கும் இந்நாட்டு நடைமுறையில் ஏதாவது ஒன்றில் அதிருப்த்தியிருக்கும். பிரதம மந்திரியானவரிடம் சென்று அவரது துவிச்சக்கரவண்டித் தலையுபகரணத்தை தொலைக்காட்சியில் பார்த்துச் சிரிப்பதை விட்டுவிட்டுக் கல்விக்கான அரசாங்க உதவித்தொகையைக் கூட்டினால் என்னவென்று ஏன் கேட்கக் கூடாது...?

அதிகமான மக்கள் அரசியலில் பங்களிக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். ஷெல்(Shell) ஐயும் பிரஞ்சு நாட்டு வைனையும் பகிஷ்கரிப்பது போல் ஒவ்வொரு விடயத்தையும் மேலும் எப்படித் திறம்படச் செய்யலாம் என எமது அரசியல்வாதிகளுக்குத் தெரியப்படுத்தலாம். எந்த வழியில் நாங்கள் செல்ல வேண்டும் என்பதை முடிவு செய்வதில் பெரும்பாலேனோர் பங்களிப்பதன் மூலம் ஜனநாயகத்தைச் சிறப்படையச் செய்யலாம். புள்ளடியிடுவதுடன் மட்டும் ஒருவருடைய கடமை முடிந்து விடாது. பெரும்பாலான மக்கள் கலந்துரையாடல்களில் கலந்துகொள்வதன் மூலம் பலரது கருத்துக்கள் அரசாங்கத்தின் முன் வைக்கப்படும். ஒரு காரியத்துக்காகப் பாடுபட்ட மக்கள் தாமும் தமது நாடு பற்றிய ஒரு முடிவை எடுக்கத் தமது பங்களிப்பினை அளித்ததாக உணருவர். கூடுதலான பங்களிப்பும் குறைந்த அரசு அதிகார முடிவும் (Bureaukrati) விபரமான தகவலும் டென்மார்க்கை மேலும் ஜனநாயகபூர்வமாக்கும்.

**நன்றி: கற்பகம்**

*தமிழில் மொழிபெயர்ப்பு*
*திருமதி. வசந்தி கமலநாதன்.*


## தமிழ் - டெனிஸ் தோழமை ஒன்றியம்
## Tamil Danish Friendship Association

**Postboks 103, DK-7400 Herning, Denmark**
**Tlf & Fax +45 97 12 55 93, Giro 895-0892**


சோசலிச ஜனநாயகக்கட்சியின் இளைஞர் பகுதியினாலும் Det Fri Aktuelt என்ற பத்திரிகையினாலும் இணைந்து நடத்தப்பட்ட போட்டியில் செல்வி. சாரதா பாலகிறிஸ்ணன் "எதிர்காலத்தில் ஜனநாயகம்" என்ற தலைப்பில் கட்டுரையை எழுதி முதல் பரிசு பெற்றார். இப் போட்டியில் 700 பேருக்கு மேல் பங்குபற்றினார்கள். டெனிஸ் பிரதம மந்திரி திரு Poul Nyrup Rasmussen செல்வி. சாரதா பாலகிறிஸ்ணனை கௌரவித்து பரிசில்கள் வழங்கினார்.

***Sara Balakrishnan er 19 år, bor i Ikast og læser til socialrådgiver i Odense. Hun har skrevet denne artiklen på kronik konkurrencen i Det Fri Aktuelt og fik***

தகவல் சேவை பலாபலன்களை வாசகர்களுடன் பகிரலாம்.சஞ்சிகை தொடர்ந்து பெற விரும்பினால் சந்தா தந்து பதியுங்கள் உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக! முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் !

www.tamilarangam.net

## நாடும் நடப்பும்

1) வருடம் ஒருமுறை நடைபெறும் கத்தோலிக்க இளைஞர் சங்கத்தின் ஒளிவிழா மிகச் சிறப்பாக நடந்து வந்தது. இம்முறை இருப்பதற்கு இடமின்றி பலர் அவலப்பட்ட நிலையும், சரியாகத் திட்டமிடப்படாத தன்மையும் தெளிவாகத் தெரிந்தது. இதைக் கத்தோலிக்க இளைஞர் சங்கம் கருத்தில் கொள்ளுமா? மகேனின்- செம்பாட்டு மண் என்ற நாடகத்தை பார்க்கவென வந்தவர்கள் பலர். ஆனால் நாடகத்தை ஒலிவாங்கி சாப்பிட்டு அடிக்கடி ஏப்பம் விட்டது. வசதி குறைந்த எமது நாட்டிலேயே வெட்ட வெளியில் ஒரு ஒலிவாங்கியுடனேயே நாடகங்கள் சிறப்பாக நடந்தன. இவ்வளவு விஞ்ஞான வளர்ச்சியும், பொருளாதார வசதியும் கொண்ட நோர்வேயில் இந்த ஒலிவாங்கிப் பிரச்சினைகள் எங்கும் காணக் கூடியதாக உள்ளது. நோர்வேயிய நாடகங்கள், மேடைகளில் இப்படியான பிரச்சனைகள் தோன்றுவதில்லை ஏன்?- ஆடத்தெரியாதவள் கூடம் கோணல் என்றாளாம்--என்ற கணக்குப்படி கருவிகளைக் குறை சொல்லாதீர். தொழில் நுட்ப உதவியாளர்கள்,தாமும் விழித்துத்தான் இருக்கிறோம் என்பதைக் காட்டமுயற்சிக்கிறார்களா? என எண்ணத்தோன்றுகிறது. எத்தனையோ நாட்கள் சொந்த வேலைகளை விட்டு பழகிய நாடகங்கள் மேடைறும் போது தொழி நுட்பக் குறைபாடுகளால் இப்படி நாசமாகிப் போவதை அனுமதிக்க இயலாது.

2) படிப்பில் ஆர்வம் கொண்ட பலசிறார்களை இலங்கையில் தமிழ்பகுதியில் தெரிவுசெய்து, அவர்களுக்குக் கல்வியறிவு கொடுக்க நோர்வே வாழ் கத்தோலிக்கர்கள் திட்டமிட்டுள்ளனர். இப்படியான ஆக்கபூர்வமான செயல்களுக்கு மக்கள் ஆதரவு கொடுக்க வேண்டியது முக்கியமானது.

3) 29.1.97 அலுவலகங்களாய் இருந்த கட்டிடம் ஒன்றைப் பாவிப்பதற்கு இந்து கலாச்சார மன்றத்தினர்(இ.க.ம) அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்! இதேவேளை டி.என்.பி வங்கித் தரகர்கட்கும் நன்றி கூறவேண்டியுள்ளது. காரணம் அனுமதி பெறுவதற்கு முக்கியமாக முன்நின்று உழைத்தவர்களிவர்கள் எனப்பேசிக் கொள்ளப்படுகிறது. சென்ற சர்வதேசத்தமிழர் வெளிவந்து பலநாட்களுக்கு பின்பே இவ்வனுமதி கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. அயலவர் எவரும் முறைப்பாடு செய்யாத காரணத்தினாலேயே அனுமதி கிடைத்தது. இனி அயலவர்களுக்கு கஸ்டமிராது

பார்த்துக்கொள்ளவேணடும் என்பது பலர் கருத்து. கிடைத்த அனுமதியையாவது நல்லமுறையில், நாளை இந்துக்களுக்கு அவப்பெயர் ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்வீர்களா? இதனால் வளர்ந்து வரும் இனத்துவேசத்திற்குத் தூபம் போடாது இருப்பது முக்கியமானது. ஏனெனில் மக்கள் குடியிருக்கும் பகுதியிலேயே இக்கட்டிடம் அமைந்துள்ளது.

4) இந்துகலாச்சாரமன்ற நிர்வாகத்தின் அதிகார

தனங்களை. அம்பலப்படுத்தி ஒருவர் கடிதமொன்று சமர்ப்பித்து பதவி விலகிக் கொண்டதாக தொலை பேசிச் செய்தி ஒன்று தகவல் தந்தது. <u>இந்து அமைப்பு அதனூடாக ஓர் ஆலயம் என்பது எமக்கு வேண்டிதொன்றே.</u> இதை யாரும் மறுக்கவோ வெறுக்கவே மாட்டார்கள். இந்து மதத்தத்துவங்களுக்கு அமைய நடப்பதும் ஆணவம், அதிகாரவெறி, பொல்லாமை (பிறரை இம்சித்தல்), போகவிட்டுப் புறஞ்சொல்லல் போன்றவை இல்லாதிருக்க வேண்டியதும் அவசியமானது. பூசைக்கு வந்தவர்கள் காதில் விழும்படியாக அவர்களைப்பற்றி இ.க.மன்றத்தின் நிர்வாகசபை உறுப்பினர் சிலர் தகாதமுறையில் கதைத்தவை சந்திக்கு வந்துள்ளது.இதுவா இந்து தர்மம்? பொறுமை, எதையும் தாங்கும் தன்மை, தற்பெருமையின்மை இவற்றை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்ததே இந்துமதம். இப்படியான செயல்களால் சிலர் இ.க.ம இல் வெறுப்புக் கொண்டுள்ளார்கள். <u>பொதுவேலை, சமூகவேலை என வருபவர்கள் தமது சொந்த விருப்பு வெறுப்புக்களை வீடுகளில் விட்டுவிட்டு வருவது மிகமுக்கியமானது. அதேவேளை நிர்வாக சபையில் உள்ளவர்களின் மேலுள்ள வெறுப்பை மன்றத்தில் காட்டுவதும் நியாயமில்லாதது.</u>

வேரித்தாஸ் தமிழ்ப்பணி ! 1976-1996

வானலையில் தவழ்ந்து வரும் நமது தமிழ்ப்பணி நிகழ்ச்சிகளை இந்திய - இலங்கை நேரப்படி

காலை 6.00 மணி முதல் 6.30 மணி வரை
மாலை 7.30 மணி முதல் 8.00 மணி வரை

சிற்றலை-31 மீட்டர் அலை-வரிசையில் கேட்டு மகிழுங்கள்.

அலை வரிசை புள்ளி

காலை : 9670 மாலை : 9520



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5)நோர்வேமியர்களுக்கு(3.2வீதம்) அடுத்தபடியாக தமிழர்கள்(6.2வீதம்) தான் வேலை - யின்மை குறைந்தவர்களாக உள்ளனர். சராசரிகுடியேறியோர் (15.4வீ), சோமாலியர்(37.7வீ)

6) கொழும்பிலுள்ள தமிழர்கள் வைத்தியசாலைகளில் முறையற்ற முறையில் நடத்தப்படு கிறார்களாம். ஏன் இங்கு வந்தீர்கள்? பிரபாகரனிடம் போங்கள்! என விரட்டப்படுவதுடன் சரியாக மருந்துகள் கொடுக்கப்படுவதில்லையாம். கடவுளுக்கு அடுத்ததாக மனிதன் நம்புவது மருத்துவரையே! படித்துப் பட்டம் பெற்ற சிங்கள வைத்தியர்கள், தாதிகளே இப்படி நடந்து கொண்டால் சிங்கள அரசால் வெறித்தனமாகத் தூண்டிவிடப்படும் பாமர சிங்கள மக்கள் எப்படி நடந்து கொள்வார்கள். சிங்களமக்கள் பாசிசஅரசின் போரை ஓர் இனவெறிப்போராட்டமாகக் கருதுகிறார்களே தவிர தமிழ்களின் உரிமைக்காகவும், சிங்கள அரசின் அத்துமீறல்களால் நடைபெறும் போராகக்கருதவில்லை என்பது வேதனைக்குரியது. விடுதலைக்காக உழைக்கும் எந்த இயக்கமும் சிங்களவர்மத்தியிலும் தமது பிரசாசவேலைத் திட்டங்களை முன்வைப்பது முக்கியமானது. எமது போராட்டமானது பௌத்த சிங்கள சிறீலங்கா ஏகாதிபத்திபத்திற்கு எதிரானதே தவிர சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல.

7) தமிழ் அகதிகள் மீண்டும் திருப்பி அனுப்புவதையிட்டு உண்ணாவிரதம் ஒன்றை வந்தவர்களே மேற்கொண்டனர். நாகரீகம் கொண்டவர்கள், மனிதாபிமானிகள் என தமக்குத் தாமே பெயர் சூட்டிக்கொண்ட நோர்வேமியர் அந்த உண்ணாவிரதத்தையே அசட்டை செய்யாது இருவரைப் பிடித்து வந்து இலங்கைத்தூதரகத்தில் கையெழுத்து இடுமாறு பணிக்கப்பட்டனராம். இவ்விருவரும் மறுத்ததினால் மீண்டும் போணபூ விமானநிலையத்தில் வைத்திருந்து நீதிபதியின் மறுபரிசீலனை வருவதற்கு முன்பே அனுப்பப் பட்டதாக நம்பகரமான செய்திகள் தெரிவிக்கின்றன. அகதியாய் வந்தவர்களையே அந்நாட்டுத் தூதரகத்தில் கொடுக்க முயன்ற அநியாயம் வேறெந்தத் தேசத்தில் நடந்திருக்கும்? என எண்ணத் தோன்றுகிறது.

8) நோர்வேயில் ஒருவர் பல அமைப்புகளில் இருப்பார். இது முக்கியமாக தமிழர்களிடையே காணப்படும் ஓர் நிகழ்வு. இதனால் ஒருதலைக்குப் பல மடங்கு பணம் அரசுகொடுக்க வேண்டிவருவதால் ஒருவர் ஒரு அமைப்பில் மட்டும் தான் இருக்கலாம் என்ற சட்டம் அமுலுக்கு வந்ததாக அறியப்படுகிறது. அரசிடம் காசு கறக்கும் அமைப்புக்கள் என்ன செய்யப்போகின்றன. பல அமைப்புகள் அழிந்துபோகக் கூடிய வாய்ப்புகளும் உண்டு.

9) ஒஸ்லோவில் வெளிநாட்டவர்களின் விவகாரங்களில் பணிபுரியும் பொலிஸ் ஒருவர் தமிழர்கள் பலரைத் தகாத தமிழ் வார்த்தைகளால், தூசணை வார்த்தைகளால் இம்சித்து உள்ளார். இவ்விடயம் டாக்பிளாத-பத்திரிகையில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. இதில் நாம் சிந்திக்கவேண்டிய ஒன்று உள்ளது. இதைச் சொல்லிக்கொடுத்தவர் யார்? நிச்சயமாக தமிழ்மொழி பெயர்ப்பாளர்களாகத்தான் இருக்கவேண்டும் என்பது பலரது எண்ணம். இது சம்பந்தமாக விஷ்ணுவின் ஒரு அவதாரத்தின் பெயர் அடிபடுகிறது. தமிழரை வைத்து தம் தலை வாழப் பணம் சம்பாதிக்கும் மொழிபெயர்ப்பாளர்கள் குறைந்த பட்சம் நீங்கள் பேசும் தாய்மொழிக்காவது விசுவாசமாக இருப்பது முக்கியமில்லையா? ஒழுங்காகத் தமிழ் எழுத வாசிக்கத் தெரியாத அவதாரம் எப்படி மொழிபெயர்ப்பாளர் ஆனது? என் பலர் வினாவுகிறார்கள். தமிழ் நடவடிக்கைக் குழு மிகத்துரிதமாக செயல்பட்டு நீதிஅமைச்சிடம் முறையிட்டதால் அந்தப் பொலிஸ்காரர் விசாரணைக்கு உள்ளாகியுள்ளார் எனத்தெரியவருகிறது. நடவடிக்கைக்குழுவினருக்கு பாராட்டுக்கள்!

10) யாழ்பாணத்தை விட்டுப் புலம்பெயர்ந்து கிளிநொச்சி போன்ற பகுதிகளுக்கு வந்த மக்களின் நிலமை மிக மோசமாக உள்ளது. பாம்புக் கடியில் பலர் இறந்துள்ளனர். அது மட்டுமல்ல நோயெதிர்ப்புத் தன்மை குறைவதால் சாதாரண தடிமன் காய்ச்சலே உயிரை விழுங்கி விடுகிறதாம். ஒரு குளிசை டிஸ்பிறின் ஒருமாதச் சம்பளமாக உள்ளது.

–உண்மை விளம்பி

விளம்பரம்: 1.மகிழ்வான விடுமுறைக்கு மலிவான விமான டிக்கட்டுகள் ஒழுங்குசெய்துதரப்படும்
2.நோர்வேஜிய-தமிழ்-ஆங்கில மொழிபெயர்ப்புகள், சகலவிதமான அச்சுவேலைகள்-மலிவாக
3.வீடியோ படப்பிடிப்பு ஒழுங்குசெய்யப்படும்
4.தமிழ்க்கலைஞர்கள் தொடர்புறுக! கலைநிகழ்ச்சிகள், கவியரங்கு, உரைநிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்படும்
சர்வதேசதமிழர் தகவல் பரிமாற்ற சேவை:தொலைபேசி – பக்ஸ்:32.813416



சர்வதேச தொலைபேசி

VARMA MARKETING
K.Kamalarajah
Tann stad,
P.O.Box 3,
N-2973 Ryfoss Norway

more information about WinTamil.

– advt.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Tollvesenet informerer

# Tolldistriktene Oslo og Akershus er slått sammen

Oslo tolldistrikt og Akershus tolldistrikt er fra 1. januar 1997 slått sammen til ett tolldistrikt. Nytt navn og ny postadresse er:

**Oslo og Akershus tolldistrikt**
**Postboks 8122 Dep**
**0032 OSLO**

**Telefon 22 86 09 99**

Åpningstiden er fra klokken 08.00 til 15.30.

Besøksadresse:
**Tollbugt. 1 A**
Tolldistriktssjefen
Administrasjonsavdelingen
Driftsavdelingen
Kontrollavdelingen

**Schweigaardsgt. 15**
Tollkassereravdelingen

**INFORMASJON**

Oslo og Akershus tolldistrikt har opprettet et eget kontor som besvarer forespørsler av generell karakter. Åpningstiden er fra klokken 08.00 til 15.30.

**Infosenteret**
Tollbugt. 1 A (inngang fra Prinsens gate)
Postboks 8122 Dep
0032 OSLO
**Telefon 22 86 08 50**
**Telefaks 22 33 72 99**

TOLL- OG AVGIFTSDIREKTORATET

Innrykket av Statens informasjonstjeneste A-4/97

JUSTISDEPARTEMENTET

# Avvikling av kommersielt oppstilte utbetalingsautomater

**Ny forskrift gjelder fra 2. januar 1997**

Justisdepartementet har fastsatt at alle tillatelser til oppstilling av kommersielle utbetalingsautomater (tidligere kalt ferdighetsautomater) skal falle bort senest 1. april 1997.
Dette gjelder utbetalingsautomater der overskuddet av lotteridriften ikke går til et lotteriverdig formål.

Rundskriv G-1/97 (96/2067 A-AT) og mer informasjon om avviklingen kan du få hos 1. juridiske kontor, Sivilavdelingen, Justisdepartementet, telefon 22 24 54 51, telefaks 22 24 27 22. Den nye forskriften, med fullstendig tekst, er tatt inn i Norsk Lovtidend.

Innrykket av Statens informasjonstjeneste A-3/97

**நோர்வே நீதி அமைச்சு: வர்த்தகரீதியில் இயங்கும் காசுவழங்கு-தானியங்கிகள்.**

**02-01-1997 இலிருந்து செல்லுபடியாகும் புதியவிதி.**
01.04.1997 உடன், வர்த்தகரீதியான காசுவழங்கு-தானியங்கி (முன்பு வினைத்திறனானதானியங்கிகள் என அழைக்கப்பட்டது) களுக்கான அனுமதிகள் செல்லுபடியாகாதென நீதிஅமைச்சு தீர்மானித்துளது.
இந்தவிதி-லாட்டரிமுகாமையால் வரும்லாபம், பெறுமதியான லாட்டரிநோக்குக்கு, போகாமல் இயங்கும்-காசுவழங்கு தானியங்கிகட்கே பொருந்தும்.
சுற்றுநிருபம் ஃகே-1-97 (96-2067அ-அ.தே) அத்துடன் செல்லுபடியாகாமை பற்றிய மேலதிகதகவல்களை பெற தொடர்புறுக: 1.சட்டகந்தோர், சிவில்பிரிவு, நீதிஅமைச்சு, தொலைபேசி:22.245451, ரெலிஃபக்ஸ்:22.242722.
இந்தபுதியவிதி, பூரணவிளக்கத்துடன் நோர்வேஜியசட்டக் கோவையில் சேர்க்கப்பட்டுள்ளது.

-அரச தகவல் சேவையால் வழங்கப்பட்டது அ-3-97

சுங்கத்துறை அறிவிப்பது:

# ஒஸ்லோ, ஆகர்சுஸ் சுங்கமாவட்டங்கள் ஒன்றாக்கப்பட்டுள்ளன.

ஒஸ்லோ சுங்கமாவட்டம், ஆகர்சுஸ் சுங்கமாவட்டம் 01.01.1997 இலிருந்து ஒரே சுங்க மாவட்டமாக்கப்பட்டுள்ளது. புதிய பெயர், புதியமுகவரி :
ஒஸ்லோ-ஆகர்சுஸ் சுங்கமாவட்டம்
த.பெ.8122 அமைச்சு, 0032 ஒஸ்லோ தொலைபேசி:22860999 திறக்கும்நேரம்:08.00-15.30
வருகைமுகவரி: தொல்பு காத்தா.1அ,
சுங்கமாவட்டஅதிபதி, நிர்வாகபிரிவு, முகாமைபிரிவு, கட்டுப்பாட்டுபிரிவு
ஸ்வைகோர்ட்ஸ் காத்த.15
சுங்ககாசாளர் பிரிவு
தகவல்: ஒஸ்லோ-ஆகர்சுஸ் சுங்கமாவட்டம் பொதுவான விடயங்கள்குறித்த கேள்விகட்கு பதில்தர ஒரு அலுவலகத்தை இயக்குகிறது. திறக்கும்நேரம்:08.00-15.30
தகவல்நிலையம், தொல்பு காத்தா.1அ (பிரின்சன்ஸ் காத்தா ஊடாக) த.பெ.8122 அமைச்சு 0032 ஒஸ்லோ தொலைபேசி:22860850 தொலைநகல்:22337299 சுங்க-தீர்வை பணிப்பாளர் அ-4-97

www.tamilarangam.net

Receiver:

# C-BLAD

Subscription:
Scandinavia: 90,-NKR/YR
Other Countries:15,-USD

Editor:N.S.Pirabu,B.Sc.,Dip.Jour(U.K)
L.Hervigs vei 69A,3035 Drammen
Norway.Tel/Fax.47.32.813416
E.mail:nsp@oslonett.no
A/C:05320899453,Postbanken,oslo-2

Norges Tamiltidsskrift for informasjon,kunnskap,kultur og solidaritet.

**நோர்வே திட்டமிடல்,ஒருங்கிணைப்பு அமைச்சு**
**அமைச்சுகளில் மாற்றங்கள்.**

01.01.1997இலிருந்து,அரசாங்கம் புதிய திட்டமிடல்-ஒருங்கிணைப்பு அமைச்சை உருவாக்கியுள்ளது. அத்துடன் மீளமைப்பு காரணமாக புதிய தொழில்-வர்த்தகஅமைச்சும்:எண்ணை-சக்தி அமைச்சும் எமக்கு புதிதாக கிட்டியுள்ளன.

தொழில்-வர்த்தகஅமைச்சு(NHD)
த.பெ.8014 அமைச்சு,0030 ஒஸ்லோ தொலைபேசி:22246507 தொலைநகல்:22249525

NHD தேசிய,சர்வதேசிய அம்சங்கள் தொடர்பான பார்வையில்,ஒருங்கிணைக்கப்பட்ட பூரண தொழில் கொள்கையை நெறிப்படுத்தும்.
கப்பல்துறை,வர்த்தகம்,சர்வதேசியமயமாக்கல் போன்ற விடயங்கள் வெளிநாட்டமைச்சிலிருந்து இங்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எண்ணை-சக்தி அமைச்சு(OED)
த.பெ.8148 அமைச்சு,0033 ஒஸ்லோ தொலைபேசி:22246109 தொலைநகல்:22249565

OED எண்ணை,வாயு-சக்தி சம்பந்தமான ஒருங்கிணைக்கப்பட்ட,பூரண கொள்கையை நெறிப்படுத்தும்.

திட்டமிடல்-ஒருங்கிணைப்பு அமைச்சு(PSD)
த.பெ.8004 அமைச்சு,0030 ஒஸ்லோ தொலைபேசி:22244660 தொலைநகல்:22242710-14

PSD அரசின்கொள்கைக்குட்பட்ட முக்கியதுறைகளில் அரசினதும்,அமைச்சுகளினதும் செயல்முறையை நீண்டநோக்கில் திட்டமிடலும்,ஒருங்கிணைப்புக்கும் பொறுப்பாகும்.
முந்தைய நிர்வாகஅமைச்சு இப்புதிய அமைச்சின் ஒரு பகுதியாக வந்துள்ளது.
அமைச்சுகள் பற்றிய தகவல்க ளீ,நோர்வே பொது கோவைப்படுத்தல்-தகவல் (ஊடின்) எனும் அரசு-அமைச்சுகளின் பொது (கணனி)எலக்ரோனிக் பிரசுரத்தில் காணப்படுகிறது.
முகவரி:http://odin.dep.no/

-அரசதகவல்சேவையால் வழங்கப்பட்டது. அ.2-97

PLANLEGGINGS- OG SAMORDNINGSDEPARTEMENTET

## Endringer i departementene

Fra 1. januar 1997 opprettet regjeringen det nye Planleggings- og samordningsdepartementet. I tillegg skjedde en omstrukturering, og vi fikk de nye departementene Nærings- og handelsdepartementet og Olje- og energidepartementet.

Nærings- og handelsdepartementet (NHD)
Postboks 8014 Dep, 0030 Oslo. Telefon: 22 24 65 07.
Telefaks: 22 24 95 25.
NHD skal legge til rette for en samordnet og helhetlig næringspolitikk, der nasjonale og internasjonale sider sees i sammenheng. Fra Utenriksdepartementet er overført saksområdene skipsfart, handel og internasjonalisering.

Olje- og energidepartementet (OED)
Postboks 8148 Dep, 0033 Oslo. Telefon: 22 24 61 09.
Telefaks: 22 24 95 65.
OED skal legge til rette for en samordnet og helhetlig olje-, gass- og energipolitikk.

Planleggings- og samordningsdepartementet (PSD)
Postboks 8004 Dep, 0030 Oslo. Telefon: 22 24 46 60.
Telefaks: 22 24 27 10/14.
PSD vil få ansvar for langsiktig planlegging og samordning av regjeringens og departementenes arbeid innenfor hovedområdene i regjeringens politikk. Det tidligere Administrasjonsdepartementet inngår som en del av det nye departementet.

Informasjon om departementene finnes også på Offentlig dokumentasjon og informasjon i Norge (ODIN), en felles elektronisk publikasjon fra regjeringen og departementene. Adressen er: http://odin.dep.no/

Innrykket av Statens informasjonstjeneste A-2/97



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்